Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + II

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு:2035 கார்த்திகை 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால்07 (20.11.2004) சனிக்கிழமை இதழ்:50

### வல்வை - சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் பயங்கரம்!

# விளையாட்டு வீரர்கள் மீது சூடு;

# இரண்டு பேர் துடிதுடித்துப் பலி!

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை – ஊரிக்காட்டுப் பகுதியில் – சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் நேற்றுமாலை நடத்திய கண் மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு அப்பாவி இளைஞர்கள் கொல் லப்பட்டனர். அத்துடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்தார். மிகவும் நெருக்கமாக இராணுவ முகாம்கள் அமைந்துள்ள வல்வெட்டித்துறைப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

வல்வெட்டித்துறை – ஊரிக்காடுப் பகுதியில் உள்ள சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டம் ஆடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீதே நேற்றுமாலை 3.10 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது.

தொண்டமனாறு பக்கமாக இருந்து மோட் டார் சைக்கிளில் வந்த இனந் தெரி யாத நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் சுடப்பட்ட சம்பவம் திட்டமிடப்பட்டதொரு படுகொலை!

### யாழ்.மாவட்ட அரசியற்துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மைதானத்தில் விளை யாடிக்கொண்டிருந்த இரு இளை ஞர்கள் நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் ஒரு திட்டமிட்ட செயலே என்றும், இந்தச் சம்பவத்தைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை வெளியிட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளி யிட்ட அறிக்கையில் மேலும் -

நேற்று மாலை 6 மணியளவில் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல் லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு அப்பாவி இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் குடும்பஸ்தர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார். இந்த அப்பாவி இளைஞர்கள் மீதான படுகொலைச் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளை ஞர்கள் மீதான கொலை வெறியாட் டத்தை வன்மையாகக் கண்டிப்ப துடன், இது ஓர் திட்டமிடப்பட்ட வகை (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் கொழும்பில் சுட்டுக் கொலை!

### ஆயுள்தண்டனை வழங்கிவிட்டு திரும்பியபோது சம்பவம்



(கொழும்பு)

உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பே பிட்டியவும் அவரது மெய்க்காவலரான பொலிஸ் இன்ஸ்பெக்டரும் நேற்றுமாலை கொழும்பு சரண மாவத்தையிலுள்ள உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து இனந் தெரியாத இருவரால் சுட்டுக்கொல்லப்பட் டனர்.

கொழும்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியிருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பே பிட்டிய நேற்று போதைவஸ்துக் கடத்தலு டன் தொடர்புடைய வத்தளையைச் சேர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு படையினரே பொறுப்பேற்கவேண்டும்!

## தேடுதலுக்கு ஜனாதிபதி உத்தரவு!



...பட்டிய நேற்று போதைவஸ்துக் கடத்தலுடன் தொடர்புடைய வத்தளையைச் சேர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு படையினரே பொறுப்பேற்கவேண்டும்!

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய ரீதியாக விளையாட்டுத் துறையில் ஏற்படுத்தப்படுகின்ற எழுச்சியைத் தாங்கமுடியாத படையினர் மைதானத்துக்குள் சென்று விளையாட்டு வீரர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்து கொலை செய்தமையானது அவர்களின் இனவெறிச் செயற்பாட்டை எடுத்துக்காட்டுவதாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை வல்வெட்டித்துறை - ஊரிக்காடு பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் உதைபந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விளையாட்டு வீரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு விளையாட்டு வீரர்கள் கொல்லப்பட்டும் ஒருவர் காயமடைந்ததுமான சம்பவம் மிகவும் கண்டனத்திற்குரியதெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

# தேடுதலுக்கு ஜனாதிபதி உத்தரவு!

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டியவின் படுகொலையுடன் தொடர்புடையவர்களை கைதுசெய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னான்டோவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கொலைகாரர்கள் தப்பிச்செல்லமுடியாதவாறு கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளிச்செல்லும் (12 ஆம் பக்கம் பார்க்க)

**புயலாக எழுந்த பேராபத்துக்களையெல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள இரும்பை ஒத்த மனவுறுதி எமக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எமக்கு பக்க பலமாக – மனிதமலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை நாம் என்றும் மறக்கமுடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நின்றன.**

**வே.பிரபாகரன் – தமிழீழத் தேசியத் தலைவர்.**

# இளைஞர்கள் படுகொலையைக் கண்டித்து யாழ்.குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை - சிதம்பரக் கல்லூரிக்கு சமீபமாக இராணுவத்தினரின் பின்னணியில் இளைஞர் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து - குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று நள்ளிரவு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அப்பாவி இளைஞர்கள் மீதான துப்பாக்கிச் சூடு ஒரு திட்டமிட்ட செயற்பாடே! இவ்வாறான படுகொலைகளை மேற்கொண்டு சமாதான முயற்சிகளைக் குழப்பி இந்த நாட்டில் மீண்டுமொரு இரத்தக் களரியை ஏற்படுத்துவதே இராணுவத்தின் நோக்கமாகும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்தக் கொலைவெறியாட்டம் இராணுவப் பின்னணியுடன் நடத்தப்பட்டிருப்பது தெரிகிறது.

இராணுவம் ஒரு தலைப்பட்சமாக யுத்த முஸ்தீபுகளில் ஈடுபடுமானால் இதன் எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இவ்வாறான படுகொலைகளை நாம் அனுமதிக்க முடியாது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - யாழ்.மாவட்ட சிற்றூர்தி உரிமையாளர் சங்கம் இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், இன்று குடாநாட்டில் அனைத்துப் பிரதேசத்துக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# விவாத சுற்றுப் போட்டியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மாவீரர் நாளை முன்னிட்டு நடாத்திய விவாதச் சுற்றுப் போட்டியில் இறுதிப்போட்டிக்குத் தெரிவான யாழ்.பல்கலைக்கழக அணிக்கும், யாழ்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அணிக் கும் இடையிலான விவாதச் சுற்றுப் போட்டியும், இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசளிப்பும், பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களுக்குமான பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை இரவு 8 மணிக்கு மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அத்தோடு தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வும், தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகள் அடங்கிய சிறிய கைநூல் ஒன்றும், மாவீரர் நாளையொட்டிய மாவீரர்களின் தியாகங்கள் பற்றிய சிறிய கவிதை ஒலிநாடா ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தேசிய எழுச்சி நிகழ்வுக்கு கூட்டுறவு சமூகம் தயாராகிறது

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சிநாளை முன்னிட்டும், தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டும் எழுச்சி நிகழ்வை பிரமாண்டமான முறையில் நடாத்த யாழ்.கூட்டுறவு சமூகம் தயாராகி வருகிறது.

இது தொடர்பான கூட்டம் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. தலைவர் கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வில் - எழுச்சிநாள் பற்றிய அனைத்துக் கருத்துக்களும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இதன்போது யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து கூட்டுற வாளர்களின் பிள்ளைகளில் - மாவீரரானவர்களது பெற்றோர்கள் மற்றும் சகோதரர்களைக் கௌரவிப்பது தொடர்பாகவும், தேசியத் தலைவரின் பிறந்தநாள் ஏற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை - தமிழீழத் தேசியத்தலைவரின் ஐம்பதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு, யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் மலர் ஒன்றையும் தலைவரின் பிறந்த தினத்தில் வெளியிடவுள்ளனர்.

# மாவீரர் நாளை முன்னிட்டு காரைநகரில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தின் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மாவீரர் தினத்தை முன்னிட்டு மாபெரும் சிரமதான நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் காரைநகர் பிரதேச அரசினர் பொது வைத்தியசாலை உள்வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்.கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் பங்கேற்றனர்.

மேலும் இந்த ஆண்டு மாவீரர் தினத்தை சிறப்புற அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சிற்சபேசன் தெரிவித்தார்.

## பெற்றோர் கௌரவிப்பு இடமாற்றம்

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரால் நடத்தப்பட்டு வரும் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில், இன்று திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் நிகழ்வு திட்டமிட்டபடி இடம்பெறுமெனவும்,

நாளைய தினம் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருந்த கௌரவிப்பு நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் யாழ். சன்மார்க்கவித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக தேசிய எழுச்சிப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை காலை பத்து மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் **Apple** என்னும் ஈரானியத் திரைப்படம் ஆங்கில துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது. எனவே இந்தத் திரைப்படத்தை ஆர்வலகள் அனைவரும் வந்து பார்வையிடலாமென திரைப்பட வட்டத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கருத்தரங்கும் செயலமர்வும்

இன்றும், நாளையும் வடமராட்சி வலய அதிபர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வும், திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் கணித பாட ஆசிரியர், மாணவர்களுக்கான 'ஊக்கல் உபாயங்கள்' என்னும் தலைப்பிலும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து அதிபர்களையும், ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார். (12)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## 2005 ம் ஆண்டுக்கான வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்/ ஒப்பந்த காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 27.12.2004 திகதிவரையும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

### பொருட்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரிகள்)
03. மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மருந்துகள்
05. கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்
06. பாதணிகள், மழைக்கவசம், மற்றும் தோற்பொருட்கள்
07. கட்டிடப்பொருட்கள் (சீமெந்து, ஓடுகள் முதலியன)
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன
09. கற்கள், மணல்கள்
10. நீர் வழங்கு பொருட்கள், பி.வி.சி குழாய்கள் முதலியன
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
12. மின்சார இயந்திரப் பொருட்கள், மின் கருவிகள்
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15. இரும்புப் பொருட்கள்
16. பனை மரங்கள், சலாகைகள்
17. நூலகங்களிற்குரிய நூல்கள்
18. வாகனங்களிற்கான பற்றரிகள், ரயர், ரியூப் முதலியன.
19. தீராந்திகள், றீப்பைகள், பலகைகள்
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கல்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன.
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்
22. கணனி, கணனிகளிற்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரத்திற்கான கனன், சார்ப் வகைகளிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்.

### சேவைகள்

01. அச்சிடுதல்.
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்.
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்.
04. ரியூப் ஒட்டுதல் (வாகனங்கள்)
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்.
06. ஏற்றியிறக்கல் வேலைகளிற்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல். (சுத்திகரிப்பு வேலைப்பகுதி ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்)
07. கோலவுடை தைத்தல்
08. மின் மோட்டர்கள், மின்விசிறிகள், ஜெனரேற்றர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தம்
09. மின் கலங்களிற்கு மீள மின்வலுவூட்டல்.
10. றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்.
11. வாகனங்கள் சேவீஸ் செய்தல்.
12. கணனி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் திருத்தம், சேவீஸ் செய்தல்.

கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள், சேவைகள் 2005' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்க வேண்டும்.

வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமாக விண்ணப்பங்கள் 'ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம்' என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப் படிவங்களை யாழ்.மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக (ரூபா 180/- வுடன் மேலதிகமாக வற்வரி ரூபா 27/-)ரூபா 207/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரி கிளையில் நேரடியாக வேலை நாட்களில் செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும்.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்துக்கு பொருட்கள்/சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப்புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

கலாநிதி. க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி : 15.11.2004

ராஜா யாழ்ப்பாணம்.




அட்டகாசம்
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)
தனுஷ், பிரியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே)
(சி-3319)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சத்ரபதி
(ரீல்ஸ்)



காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை
அஜித், சிநேகா நடித்த
ஜனா
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

**Experienced English Teachers Wanted**

**Kilinochchi**

The English Language College in Kilinochchi seeks experienced English teachers to.

- train local teachers (in school curriculum, grades 3 - 11)
- teach advanced english.

**Requirements :**

- Minimum 5 years experience in teaching English to children and adults.
- Excellent spoken and Written English

please send details of qualifications and experience to:

The Principal,
English Language College,
Tamils Rehabilitation Organisation,
Jaffna Road, Kilinochchi.

Applications close - 29.11.2004

The English Language College is an initiative of the Tamils Rehabilitation Organisation.

(C/2880)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண
# இரண்டு, மூன்று வருடங்கள்
# ஐ.தே.க. ஒத்துழைக்க வேண்டும்
### ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கை



கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்காக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வருமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தக் கோரிக்கை விடுத்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி -

இன்று நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இணைந்தே மேற்கொள்ள வேண்டும் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் காண்பதற்காக நான் நீண்டகாலங்களுக்கு ஆதரவை வழங்குமாறு எதிர்க்கட்சியிடம் கேட்கவில்லை. மிகவும் குறுகிய அதாவது, இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கே ஆதரவை வழங்கும்படி கேட்கிறேன்.

சமாதானம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான ஆலோசனைச் சபையில் பங்கேற்க, எதிர்க்கட்சியினர் மறுத்துள்ளனர். எனவே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாகத் தென்பகுதி அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் தென்னிலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் கட்சிகளுடன் கலந்தாலோசித்து வருகிறேன்.

இந்த நிலையில் எதிர்க்கட்சி சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து, நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு ஆதரவு வழங்க வேண்டும். நான் எதிர்க்கட்சியில் இருந்தபோது, தேசிய நலன் கருதி அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினேன்.

ஐக்கிய தேசியக் கட்சி 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்திய அரசுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது, பல அரசியல் கட்சிகளும் எதிர்த்தன. ஆனால், நானும் எனது கணவர் விஜயகுமாரதுங்கவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கினோம் எனத் தெரிவித்தார்.

# புலனாய்வாளர் கொலை; அரசாங்கம் கண்டனம்!

(கொழும்பு)

பொலன்னறுவை ரயில் நிலையத்துக்கு அருகில் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலென அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடரும் போர் நிறுத்த மீறல்கள் - விடுதலைப் புலிகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பதிலும், சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதிலும் கொண்டுள்ள அர்ப்பணிப்பு மற்றும் தீவிரத்தன்மை என்பவற்றில் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை நடத்துவதுடன், இதுகுறித்து இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்படுமெனவும் கூறப்பட்டுள்ளது.

# புலிகள் - படையினர் இன்று வவுணதீவில் சந்தித்துப் பேச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவ உயரதிகாரிகளுக்குமிடையில் இந்த மாதத்துக்கான புரிந்துணர்வுச் சந்திப்பு இன்று வவுணதீவு யுத்த சூனிய பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வகையான சந்திப்புக்களில் இனிமேல் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரோடு தளபதிகளும் கலந்துகொள்வார்கள் என, விடுதலைப் புலிகளால் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகவே, இந்தச் சந்திப்பில் தளபதிகளும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பு முக்கியமானதொன்றாகக் கருதப்படுவதால், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரொன்ட் புறூஹொவ்டேயும் கலந்து கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

வாழைச்சேனையில் கடந்த புதன்கிழமை தமது அரசியற்துறை போராளியொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் ஆரையம்பதி அலுவகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் ஆகியன குறித்து, விடுதலைப்புலிகள் தமது கண்டனத்தை இந்தச் சந்திப்பின்போது வெளிப்படுத்துவார்கள் என மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவித்தன.

## எழுதுவினைஞர்கள் சேவையில் சேர்ப்பு

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதிமுதல் 2500 எழுதுவினைஞர்கள் நாடளாவிய ரீதியில் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அரசசேவைகளில் எழுதுவினைஞர்களை இணைத்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் இருந்தே இவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

# திருமலையில் சிறப்புற நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன், அண்மையில் 43 சிங்கள முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். நடைபெற்ற விழா வின் நிகழ்வுகள் - சிங்களத்தில் நடைபெற்று அதன் தமிழ் மொழி பெயர்ப்புக்கள் உடனுக்குடன் கொடுக்கப்பட்டன.

மகிந்தபுர சிங்கள வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுகள் சியானி கொத்தலாவல சிங்கள முன்பள்ளிகளின் இணைப்பாளர் வரவேற்புரையை நிகழ்த்தினார். சங்கைக்குரிய ஆண்டான்குளம் விமலதிஸ்ஸதேரர் தனது அனுசாசனத்தில், இந்த நிகழ்வு மாவட்டத்தின் எல்லா இன மக்களையும் ஒன்றிணைக்கும் எனக் கூறினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சிங்கள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவுவதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்.

பலகாலமாக சமூக ஒற்றுமை குலைந்திருக்கும் இந்த வேளையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இந்த உதவிகள், புண்ணுக்கு மருந்திடுவது போலிருக்குமென, மகிந்தபுர சிங்கள மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த றெக்ஸ் குலத்துங்க கருத்துத் தெரிவித்தார். திருமலை மாவட்டத்தின் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கிருபா தனது உரையில் -

1990 ஆம் ஆண்டிலேயே முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதை நினைவு கூர்ந்ததுடன், அதன் இலக்கு எல்லாச் சமூகங்களையும் சேர்நத முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிப்பதுதான் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழும் முன்பள்ளிச் சிறார்களுக்குத் தீர்க்கமான வேதனங்கள் எதுவும் இன்றி, சேவை அடிப்படையில் சேவையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் பணி உன்னதமானது, போற்றப்பட வேண்டியது எனக் கூறினார்.

# யாழில் திருடப்பட்ட விக்கிரகங்கள் கொட்டாஞ்சேனையில் மீட்பு!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு, விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த இந்துக் கடவுள்களின் ஒன்பது விககிரகங்கள் கொட்டாஞ்சேனையிலிருந்து நேற்று முன்தினம் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இநத விக்கிரகங்களோடு தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்குபேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோதே அங்கு விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த இந்த விக்கிரகங்கள் மீட்கப்பட்டன.

அதேநேரம் இந்த விக்கிரகங்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கடத்திவந்ததாகக் கூறப்படும் லொறியும் கைப்பற்றப்பட்டது. இந்த லொறி யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான லொறி எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சந்தேக நபர்கள் நால்வரையும் நீதிமன்றில் ஆஜர்படத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (தே)

## பதவி விலகிய மேவின் சில்வா பிரதி அமைச்சர் ஆசனத்திலேயே

கைத்தொழில் தொடர்புகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் பதவியை வகித்த மேவின் சில்வா அந்தப் பதவியை இராஜினாமாச் செய்த பின்னரும், நேற்று முன்தினம் கூடிய நாடாளுமன்ற அமர்வின்போது, பிரதியமைச்சருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்திலேயே அமர்ந்திருந்தார்.

பிரதி அமைச்சர் - பதவியிலிருந்து விலகிய மேவின் சில்வாவுக்கு, சாதாரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிசையில் ஆசனத்தை ஒதுக்காமல்விட்டதற்குக் காரணம் - அவர் பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தது பற்றி உத்தியோக பூர்வமாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் அறிவிக்காமையே எனத் தெரியவருகிறது. (தே)

## வரவு - செலவுத்திட்ட அறிக்கை: ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த வரவு - செலவுத்திட்ட அறிக்கைக்கு ஐக்கிய தேசிய கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட இந்த வரவு - செலவுத்திட்ட அறிக்கை குறித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அந்தக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை நடத்தினார். பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர், ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தலின்போது, சுதந்திர முன்னணி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி சந்திரிகா அடுத்தவாரம் ஈரானுக்கு விஜயம் செய்யத் திட்டம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்தவாரம் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, ஈரானுக்குச் செல்லவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார மற்றும் சமூக தொடர்புகளைப் பரந்தளவில் வளர்த்துக்கொள்ளும் ஒப்பந்தங்கள் பலவற்றில் ஒப்பமிடவுள்ளதாகவும், கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஈரான் விஜயத்துக்கான பயணத்தை ஒழுங்கு செய்வதற்காக, அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹமீத் இலங்கை வந்துள்ளார்.

இந்த விஜயம் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை சக்திமிக்கதாக்கும் எனவும், இலங்கையின் அரச தலைவர் ஒருவர் ஈரானுக்கு வருகை தரும் முதலாவது சந்தர்ப்பம் எனவும் அந்த நாட்டின் பிரதிவெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயம், சுகாதாரம் மற்றும் முதலீடு உட்படப் பல துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையும் - ஈரானும் நிரந்தரமாக ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் - புகழ்மிக்க நாகரிகத்துடன் வாழும் இந்த இரு நாட்டு மக்களுக்குமிடையே மேலும் உறவுகள் வளர்வதற்கு இது உதவும்.

எரிபொருள் சிக்கலை எதிர்கொள்ள வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில், எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் நாடு என்ற வகையில் - இலங்கைக்கு ஏதாவது உதவி வழங்குவது பற்றி ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த விஜயத்தின் போது, ஆராயப்படும்.

இந்த நாட்டில் தொடர்ந்து யுத்தம் நடைபெறுவதை நாம் விரும்பவில்லை. இங்கு தற்போது நிலவும் இந்தச் சமாதானச் சூழல் தொடர்ந்து நீடிக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

### மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் திருக்கார்த்திகைவிழா

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் திருக்கார்த்திகை விழா, எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு விசேட ஆராதனைகளுடன் ஆரம்பமாக வுள்ளது. அன்றைய தினம் ஆலய தரிசனம், ஆராதனை மற்றும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற விரும்புவோர் ஒரே நேரத்தில் ஆலயத்துக்குச் செல்லமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உலகக்கிண்ண தகுதிச்சுற்றில் பிறேசில் அணி அதிர்ச்சித் தோல்வி



உலகக்கிண்ண தகுதி உதைபந்தாட்டப்போட்டியில் தற்போது சம்பியனான பிறேசில் அணி ஈகுவடோரிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

ஜேர்மனியில் 2006 இல் உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப்போட்டிகள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன. தென்அமெரிக்க பகுதிக்கான போட்டியில் பிறேசில் அணி கடந்த புதன்கிழமை ஈகுவடோரை சந்தித்தது.

ஈகுவடோர் தலைநகர் குயிட்டோவில் நடந்த இந்தப்போட்டியில் பிறேசில் அணியின் றொனால்டோ, றொனால்டினோ, கபு என நட்சத்திர வீரர்கள் அனைவரும் இடம்பெற்று இருந்தனர். இதனால் இந்த அணி எளிதாக வெற்றிபெறும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சொந்த மண்ணில் விளையாடிய ஈகுவடோர் வீரர்கள் கடும்போட்டியை கொடுத்தனர். முதல் பாதியில் முடிவில் இரு அணிகளாலும் கோல் எதுவும் அடிக்க இயலவில்லை.

இதையடுத்து இரண்டாவது பாதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பிறேசில் வீரர்கள் கோல் அடிக்க அதிவிரைவாக முன்னேறிச் சென்றனர். ஆனாலும், ஈகுவடோரின் தற்காப்புப் பகுதியைத் தகர்க்க இயலவில்லை.

இந்தச் சூழலில் 77வது நிமிடத்தில் ஈகுவடோரின் எடிசன் மென்டஸ் பந்தை தாழ்வாக அடிக்க அதை பிறேசில் கோல் கீப்பர் திடா தடுக்க தவறினார். இதன்மூலம் ஈகுவடோர் 1:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது. பிறேசில் அணியோ தனது உதைபந்தாட்ட வரலாற்றில் இரண்டாவது முறையாக ஈகுவடோரிடம் தோல்வியை சந்திக்கவேண்டியதாயிற்று.

மற்றொரு போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி வெனிசுலாவை 3:2 என்ற கோல்கணக்கில் வென்றது. இதேபோல் கொலம்பியா அணி பொலிவியாவை 1:0, உருகுவே அணி பராகுவேயை 2:0, பெரு உ... சிலியை 2:1 வென்றன.

தற்போது தென் அமெரிக்க பிரிவில் ஆர்ஜென்ரீனா 22 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. பிறேசில் அணி 20 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. இந்தப் பிரிவில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் உலக கிண்ணப் போட்டிக்கு தகுதிபெறலாம். எனவே, பிறேசிலுக்கு பிரச்சினை எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை.

ஆசியப் பிரிவில் சீனாவுக்குத்தான் பெரிய ஏமாற்றம். கடந்த முறை உலக கிண்ணப் போட்டிக்கு தகுதி பெற்ற இந்த அணி, இம்முறை வாய்ப்பை இழந்தது. புதன்கிழமை நடந்த போட்டியில் சீன அணி ஹொங்கொங் அணியை 7:0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தியது. ஆனாலும், கோல் அடிப்படையில் குவைத் தகுதிபெற்றது.

குவைத் அணி மலேசியாவை 6:1 என்ற கோல் கணக்கில் வென்றது. சீனா மற்றும் குவைத் தலா 15 புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந்தன. ஒட்டுமொத்ததாக சீனா 14, குவைத் 15 கோல் அடித்து இருந்தன. இந்த ஒரு கோல் வித்தியாசம் சீனாவின் வாய்ப்பை பறித்தது. உலகக்கிண்ணப் போட்டிக்கு தகுதி பெறத் தவறியதையடுத்து சீனாவின் பயிற்சியாளர் ஏரிஹான் (நெதர்லாந்து) பதவி நீக்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பாக் கண்டத்துக்கான பிரிவில் கிரீஸ் அணி கசகஸ்தானை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. உக்ரைன் அணி துருக்கியை 3:0 நெதர்லாந்து அணி அந்தோராவை 3-0, செக்குடியரசு அணி மசிடோனியாவை 2-0, போர்த்துக்கல் அணி லக்சம்பர்கை 5:0 என்ற கோல் கணக்கில் வென்றன.

ஆபிரிக்க கண்டத்துக்கான பிரிவில் கென்ய அணி கெனியாவை 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது. இப்போட்டியில் தோல்வி அடைந்த போதும் கெனியா அணி 8 புள்ளிகளுடன் முதல் இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளது. அமெரிக்கப் பகுதிக்கான போட்டியில் கோஸ்டாரிக்கா ஹெண்டுராஸ் இடையிலான போட்டி கோல் அடிக்கப்படாமல் சமநிலையில் முடிந்தது.

ஜமைக்கா, அமெரிக்கா இடையிலான போட்டியும் சமநிலை (1:1) ஆனது. இப்பிரிவில் அமெரிக்கா மெக்சிக்கோ, கவுதமாலா அணிகள் அடுத்து சுற்றுக்கு முன்னேறி விட்டன. 6 அணிகள் பங்கேற்கும் இந்தச் சுற்றின் முடிவில் முதல் மூன்று இடங்களை பெறும் அணிகள் உலக போட்டிக்கு தகுதி பெறும்.

## மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்

# சென்.அன்ரனிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்றைய ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டம் தொடங்கி முதல் 2 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் வீரர் பிக்கிலஸ் அடித்த பந்தை சிவானந்தா கோல் காப்பாளர் மிக சாதுரியமாகத் தடுத்தார். இருந்த போதும் 29 ஆவது நிமிடத்தில் அதே வீரரான பிக்கிலஸ் -சிவானந்தா அணியினரை வெட்டி நேர்த்தியான கோல் ஒன்றைப் போட்டார்.

அதைத் தொடர்ந்து 30 ஆவது நிமிடத்திலும், 36 ஆவது நிமிடத்திலும் சென்.அன்ரனிஸ் வீரர்கள் முறையே - ஜெகதீஸ், பிக்கிலஸ் ஆகியோரால் அடிக்கப்பட்ட பந்து கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியது. இதனால் இரண்டு தடவையும் கோல் அடிக்கும் வாய்ப்பை இழந்தது. இதற்கிடையில் இடைவேளைக்கு முன்னர் சென்.அன்ரனிஸ் அணியினருக்கே 6 கோணர்கள் உட்பட பல வாய்ப்புக்கள் இழக்கப் பட்டபோதும், 34 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சிவானந்தா அணியினர் மிக அழகாகப் பயன்படுத்திக் கோலாக்கினர்.


இந்தக்கோலை சிவானந்தா அணிவீரர் கிருபாகரன் தட்டிக் கொடுக்க அந்த அணிவீரர் விநோதரன் கோலாக்கினார். அதைத் தொடர்ந்து 3 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை சென். அன்ரனிஸ் அணி வீரர் ஜெகதீஸ் மிகச் சிறப்பாகக் கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் சென்.அன்ரனிஸ் அணியினர் 2:1 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டபோது சிவானந்தா அணியினர் பக்கமே பந்து விளையாடிக்கொண்டிருந்தது. 25 ஆவது நிமிடத்தில் தவறாக விளையாடியமைக்காக இரு அணி வீரர்கள் இருவருக்கு மஞ்சள் அட்டைகள் காண்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 26 ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணிவீரர் ஒருவர் நடுவரைத் தகாத வார்த்தையால் பேசியமைக்காக சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இதனால் இந்த அணி 10 பேரைக்கொண்டு விளையாட்டைத் தொடர்ந்தது. இடைவேளைக்குப் பின்னர் இரு அணிகளும் கோலடிக்க முடியவில்லை. எனவே, சென். அன்ரனிஸ் அணியினர் சிவானந்தா அணியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதிபெற்றனர். (12)

# முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் நியூஸிலாந்து 353 ஓட்டங்கள்





(பிறிஸ்பேன்)

அவுஸ்ரேலியாவின் பிறிஸ்பேன் நகரில் நடைபெற்றுவரும் நியூஸிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளில் நியூஸிலாந்து அணி 353 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதல்நாள் ஆட்ட நேரமுடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 250 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்று ஆட்டத்தை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி நிதானமாகத் தொடர்ந்து ஆடியது. ஜேக்கப் ஓரம் அபாரமாக ஆடிச் சதமடித்தார்.

வெற்ரோறி 21 ஓட்டங்களுடனும், மில்ஸ் 29 ஓட்டங்களுடனும் மாட்டின் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். ஜேக்கப் ஓரம் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவர் 178 பந்துகளில் 12 பவுண்டரிகள் 3 சிக்சர்களுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார். நியூஸிலாந்து அணி 353 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின்னர் அவுஸ்ரேலிய அணி ஆட்டத்தை ஆரம்பித்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 16 ஆக இருந்த போது ஹைடன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதையடுத்து லாங்கர் 34 ஓட்டங்களுடனும் பொண்டிங் 51 ஓட்டங்களுடனும் லீமன் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

நேற்று ஆட்டம் நிறுத்தப்பட்ட போது அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்து வீச்சில் வெற்றோறி 2 விக்கெட்டுக்களையும், மார்ட்டின், மில்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# தென்னாபிரிக்காவுடன் முதல் டெஸ்ட் இந்தியா இன்று கான்பூரில் மோதுகிறது



(கான்பூர்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டிக்காக இந்திய வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதவுள்ளது. முதல் டெஸ்ட் கான்பூர் மைதானத்தில் இன்று நடைபெறவிருக்கிறது.

இந்தப் போட்டிக்கான இந்திய வீரர்கள் நேற்றும், நேற்றுமுன்தினமும் தீவிர பயிற்சி மேற்கொண்டனர். அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சமீபத்தில் 4 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா மோதியது. இதில் இந்தியா 1-2 என்ற புள்ளியில் டெஸ்ட் தொடரை கோட்டைவிட்டது.

35 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய மண்ணில் அவுஸ்ரேலியா டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்தது. மும்பையில் நடந்த கடைசிப் போட்டியில் மட்டும் இந்தியா வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்தியா 3 சுழற்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கியது. எனவே கான்பூர் டெஸ்ட் போட்டியிலும் 3 சுழற்பந்து வீச்சாளர்கள், ஒரு வேகப்பந்து வீச்சாளர் என்ற வரிசையில் வாய்ப்பு கொடுக்கப்படவுள்ளது.

மும்பை ஆட்டத்தின் வெற்றிக்கு 3 சுழல்பந்து வீச்சாளர்களும் முக்கிய பங்காற்றினர். எனவே அதே வரிசையில் வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படலாம்.


இதுபற்றி இந்திய கப்டன் கங்கூலி இறுதி முடிவு எடுப்பார். கான்பூர் ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் சுழல்பந்து வீச்சாளர்களும் இந்த ஆடுகளத்தில் சாதிக்கமுடியும் எனக் கருதப்படுகின்றது.

முன்னரைக் காட்டிலும் தற்போது தென்னாபிரிக்க வீரர்கள் இந்திய ஆடுகளங்களில் சிறப்பாக ஆடி வருகிறார்கள். இதற்குத் தகுந்தபடி அவர்கள் தங்கள் ஆட்டத்தில் நிறைய மாற்றங்கள் செய்திருக்கிறார்கள். எனவே நடக்கவிருக்கும் டெஸ்ட் போட்டி சுவாரஸ்யமாக இருக்கும் என்று பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்தார்.



டெண்டுல்கர், ஹர்பஜன் சிங், கும்ளே, பதான் மற்றும் நெஹ்ரா ஆகியோரின் பயிற்சியை ஜோன் ரைட் உன்னிப்பாகக் கவனித்தார். நடக்கவிருக்கும் டெஸ்ட் போட்டியில் இவர்களின் பங்களிப்பு அதிக முக்கியத்துவத்தை உண்டாக்கி இருப்பதால், வீரர்கள் காயம் அடைந்துவிடாமல் இருக்க உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்குப் பின்னர் இந்திய வீரர்கள் பலரும் காயம் காரணமாக அவதிப்பட்டனர். டெண்டுல்கர், லக்ஷ்மன், கங்கூலி, ஹர்பஜன் சிங் ஆகியோர் தொடர்ந்து காயம் காரணமாக முக்கிய போட்டிகளில் இடம்பிடிக்கவில்லை.



இதனால் இந்தியாவுக்கு மிகப் பெரிய தோல்வி கிடைத்தது. இனிமேல் இதுபோன்ற துரதிஷ்டம் நெருங்கிவிடாமல் பார்த்துக்கொள்வதில் இந்திய அணி நிர்வாகம் அதிக எச்சரிக்கையுடன் உள்ளது.

தென்னாபிரிக்க வீரர்களும் பயிற்சியை மேற்கொண்டனர். கப்டன் ஸ்மித் ஆடுகளத்தை பரிசோதித்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு ஜெய்ப்பூரில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் தென்னாபிரிக்கா கடும் போராட்டத்தில் போட்டியைச் சமன் செய்தது.

எனவே முதல் டெஸ்ட் போட்டியில் கூடுதல் கவனத்துடன் ஆட தென்னாபிரிக்கா முடிவு செய்திருக்கிறது. முன்னணி வீரர் கலிஸ் காயம் காரணமாக அவதிப்பட்டுவருகிறார். எனவே, இவர் முதல் டெஸ்ட் போட்டியில் களம் இறங்குவது கேள்விக்குறியை உண்டாக்கி இருக்கிறது.

2 ஆவது டெஸ்ட் போட்டி கொல்கத்தா மைதானத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கங்கூலி மீது ஐ.சி.சி. விதித்த தடை தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதால், தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டியில் ஆடும் வாய்ப்பை அவர் பெற்றிருக்கிறார்.

## விளையாட்டு

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)


தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சென்.நிக்கலஸ் அணியை எதிர்த்து பாடுமீன் அணி மோதவுள்ளது. (12)

# கல்வியின் முக்கியத்துவம்




# குதாகல விளையாட்டு

காண்டா மிருகம் அமர்ந்திருந்தது. அதனுடைய கொம்பில், பாம்புகளை வளையமாக்கி குரங்குகள் எறிந்து விளையாடின. குதூகல விளையாட்டு எப்படி இருக்கிறது?



இங்கே மடிக்கவும்



## சிறுவர் அரங்கம்

# துருவன்

*என் அன்புக்குரிய சிறுவர்களே!*



நீங்கள் எத்தனையோ பெரியவர்களின் வாழ்க்கை பற்றி வாசித்திருப்பீர்கள். இன்னும் எத்தனையோ பெரியவர்களின் வாழ்க்கை பற்றி அறிந்துகொள்ள விரும்புவீர்கள். ஆனால் அவர்கள் எப்படி முன்னேறினார்கள் என்று நினைத்துப் பார்த்திருக்கின்றீர்களா? உங்களைப் போன்று சிறுவயதிலிருந்தே, அவர்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கியவர்கள். நல்ல மாணவர்கள் என்று பெயர் எடுத்தவர்கள். அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களால் விரும்பப்பட்டவர்கள்.

இதிலிருந்து உங்களுக்கு என்ன விளங்குகிறது? சிறுவயதிலிருந்தே பழகிய நல்ல பழக்கங்கள் தான் அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தது. கல்வி கற்பதில் இருந்த ஆர்வம் அவர்களின் முன்னேற்றத்துக்கு உதவியுள்ளது.

எனவே,நீங்களும், இத்தகைய பெரியவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதுடன் அவர்களின் முன்னேற்றத்துக்கு என்ன காரணம் என்பதையும் அறிய முயலுங்கள்.

*பாசமுடன் சாரு அக்கா*

## வன்ன வண்ணப் பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்
வண்டு தேடும் பூக்கள்
வாசம் உள்ள பூக்கள்.

பார்ப்பதற்கு அழகாம்
பாரில் உள்ள பூக்கள்
கோர்த்து மாலை ஆக்க
ஏற்ற கொத்துப் பூக்கள்.


நீலம் மஞ்சள் சிவப்பு
நிறமே ஊதா வெள்ளை
கோலம் கொண்டு நெஞ்சை
கொள்ளை கொள்ளும் பூக்கள்.

- வேதா



## வெள்ளாடு தூங்காது


வெள்ளாடு கண்களை மூடாது. 24 மணி நேரத்தில் 8 மணி நேரம் அது ஓய்வு எடுக்கும். ஆனாலும் அது மயக்க மான நிலையிலேயே காணப்படும். ஏனெனில் அது தூங்குவதே இல்லை. ஒரு சிறிய ஒலியும் அதற்கு இடையூறாகவே இருக்கும்.



## அணிலும் மரங்களும்

இந்த உலகில் உள்ள பல மில்லியன் மரங்கள் வளர அணில்களும் காரணமாய் இருக்கின்றன. பழவித்துக்களைப் புதைத்து வைக்கும் அணில்கள், பின்னர் அவற்றைப் புதைத்த இடத்தை மறந்து போகின்றன. புதைத்த இடத்திலிருந்து அவை மரங்களாய் வளர்கின்றன.

## உங்கள் பகுதி



அ.அச்சுதன்
தரம் -2
செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை.

### உலக அதிசயங்களும். அவை அமைந்துள்ள நாடுகளும்


| | | |
|---|---|---|
| தாஜ்மஹால் | - | இந்தியா |
| பிரமிட் | - | எகிப்து |
| சாய்ந்தகோபுரம் | - | இத்தாலி |
| நயாகரா நீர்வீழ்ச்சி | - | வடஅமெரிக்கா |
| மாபெரும்சுவர் | - | சீனா |
| சுதந்திரச்சிலை | - | அமெரிக்கா |
| தொங்குதோட்டம் | - | பபிலோனியா |

ம.சிவகௌரி
தரம் - 6
பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

## எனது குடும்பம்


எனது குடும்பம் அழகான ஒரு சிறிய குடும்பம் ஆகும். அன்புக்கு அப்பாவான சிற்சபேசன். அரவணைப்புக்கு அம்மாவான சாந்தி. ஆசைக்குரிய அண்ணாவான மயூரன். பாசத்துக்குரிய தங்கை அனுசிகா. எனது குடும்பம் எப்போதும் கலகலப்புடன் இருக்கும்.

சி.மதீசன்
தரம் 1.
கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.



அ.அனந்தா
செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை.

## ஓவியம் வரைந்து பழகுவோம்



படத்தில் காட்டியுள்ள குச்சிப்படங்களைப் போல், உங்களுடைய கற்பனைக்கு ஏற்றமாதிரி வரைந்து பழகுங்கள்.

இங்கே மடிக்கவும்



## இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும

(சென்றவாரத் தொடர்ச்சி)





### கடைக்கு வந்த வாடிக்கையாளர்


நகைக்கடையின் வாசலில் நின்று இளையதம்பியும் முத்துவேலுவும் கதைத் துக் கொண்டிருந்த வேளை யில். கடைக்கு முன்னால் கறுப்பு நிற வோக்ஸ்வகன் கார் ஒன்று வந்து நின்றது. அந்தக் காரை சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க பெண் மணி ஒருவர் ஓட்டிவந்திருந் தார். கடைக்கு முன்னால் தெருவோரமாகக் காரை நிறுத்தி விட்டுத் தனது குட்டி மகளையும் தூக்கிக் கொண்டு கடைக் குள் நுழைந்தார். ''வாருங்கள் அம்மா! வாருங்கள்'' என்று வந்த பெண்ணை மலர்ந்த முகத்தோடு கடைக்குள் வர வேற்றார் முத்துவேலு.

மிஸ்டர் முத்துவேலு நீங்கள் போய் வியாபாரத்தைக் கவனியுங்கள் வைரத்தை எப்படியும் இன்றைக்குள்ளாக மீட்டு விடலாம் என்று முத்துவேலுவுக்கு ஆறுதல் சொன்னார் இளைய தம்பி.

## தொலைந்த வைரம்

நகை வாங்க வந்த பெண் மணியைக் கூட்டிக் கொண்டு கடைக்குள்ளே போன முத்துவேலு. மீண்டும் வெளியே திரும்பி வந்தார். ''வெளியே வெய்யி லில் ஏன் நிற்கிறீர்கள்? இளையதம்பி உள்ளே வந்தமருங்கள் சூடாகத் தேனீ ரும் சாப்பிடுவதற்கு நல்ல மெது வடைகளையும் தாமோதர விலாசிலிருந்த எடுத்துவரச்சொல்கிறேன் என்று சொன்னார்.

'வருகிறேன் முத்துவேலு முதலில் நீங்கள் போய் வியாபாரத்தைக் கவனியுங்கள்' என்று சொல்லியவர். அத்துடன் ஒரு விடயம் மிஸ்டர் முத்துவேலு கடையில் இருந்து இப்போதைக்கு யாரையும் வெளியே எந்த வேலை க்கும் அனுப்பாதீர்கள் என்றும் கேட்டுக் கொண்டார்.



### முத்துவேலு நல்ல மனிதர்

எவ்வளவு நல்ல மனிதர் பார் இந்த முத்துவேலு. பல இலட்சங்கள் பெறுமதியான வைரத்தைத் தொலைத்து விட்டுத் தவித்திடும் போதிலும், தனது வேலையாட்கள் மேல் கொண்ட நம்பிக் கையைத் துளியளவில் தானும் இழக் காத உயர்ந்த மனது. இவரைத்தவிர வேறு யாருக்கும் வராது என்று எண்ணி வியந்தார் இளையதம்பி. தொலைந்து போன வைரத்தைக் கண்டு பிடித்துக் கொடுத்து. முத்துவேலுவின் மனக்கவலையைப் போக்காது இன்றைக்கு வீடு திரும்புவ தில்லை என்றுஉறுதியாகமுடிவுசெய்துகொண்டார் இளையதம்பி.



தெருமுனையில் ஜீப்பருகே நின்றிருந்த டிரை வரிடம் போய் தனக் காகக் காத்திராது அவரைப் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிச் செல்லும்படியும் வந்த வேலை முடிந்ததும் ஃபோன் பண்ணிக் கூப்பிடுவதாகவும் சொல்லி அனுப்பிவிட்டு நகைக் கடையை நோக்கி மெதுவாக நடந்தார் இளையதம்பி.

காலையில் பார்த்தபோது பத்து வைரங்களும் சரியாக இருந்ததாக முத்துவேலு சொல்கிறார். வைரப்பெட்டியை அவரே தனது கைகளால் காட்சி அலுமாரியினுள் எடுத்து வைத் துப் பூட்டியதாகவும் சொல்கிறார். திறப்பு இன்றைக்கு வேறு யார் கைக்கும் போகவில்லை. அப்படியிருக்கும் போது பெட்டியிலிருந்த வைரங்களில் ஒன்று மட்டும் மாயமாய் மறைந்து போனது தான் எப்படி? என்ற கேள்வி இளையதம்பி யின் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. யோச னையோடு நகைக் கடைக்குள் நுழைந் தவர் வாசலோரமாக இருந்த கதிரை ஒன்றிலே அமர்ந்தார்.

நகை வாங்க வந்த பெண் மணிக்கு கல்லுப் பதித்த காப்புக்கள் சிலவற்றை எடுத் துக் காட்டிக் கொண்டிருந்த முத்துவேலு இளையதம்பி அங்கே எதற்கு அமர்ந்திருக்கிறீர்கள். இங்கே வாருங்கள் என்று உரத்துக் கத்தி. தன்னருகே வருமாறு அழைத்தார்.

என்னை எனது பாட்டுக்கு விடமாட்டார் போலிருக்கிறதே இந்த மனிதர் என்று முணுமுணுத்த இளையதம்பி. எழுந்து சென்று கண்ணாடியாலான காட்சி அலுமாரி ஒன்றின் முன்னால் போய் நின்று அதில் வைக்கப்பட்டிருந்த கல்லு அட்டிகைகளை வேடிக்கை பார்த்தார்.

### பழைய கிழவர் பரமசிவம் எங்கே?

இளையதம்பியின் பார்வைமட்டும்தான் காட்சி அலுமாரிக்குள் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளின் மேல் இருந்ததே தவிர எண்ணம் முழுவதும் தொலைந்துபோன வைரத்தைப் பற்றியதாகவேயிருந்தது. நகைகளைப் பார்த்துக் கொண்டிருந்த இளையதம்பி. நகைக்கடையினுள்ளே வைக்கப்பட்டிருந்த கண்ணாடிக்காட்சி அலுமாரிகள் யாவும் சுத்தமாகத்துடைக்கப்பட்டு பளபளவென்று இருந்ததை அவதானித்தார்.

(தொடரும்)

## மூளைக்கு வேலை


ஒரு பால்காரரிடம், 5 லீட்டர், 3லீட்டருக்குரிய பாத்திரங்கள் மட்டுமே உள்ளன. ஒரு வாடிக்கையாளர் 4 லீட்டர் பால் கேட்கிறார். பால்காரர் எப்படி அளந்து கொடுப்பார்?

### புதிர்கள் சென்றவார விடைகள்


1.அண்ணன் கழுதை வீட்டிலிருந்து சுமந்துவந்த மூடைகள் 7. தம்பி கழுதை சுமந்துவந்த மூடைகள் 5. இதற்கு இன்னொரு விடையும் உண்டு. 3 3 மூடைகள் என்றும் எடுக்கலாம்.

2.25 அடியில் உள்ள எண்கள் இரண்டையும் கூட்டி அதிலிருந்து ஒன்றைக் கழிக்கவேண்டும்.

இந்த நான்கு படங்களும் பார்ப்பதற்கு ஒரேமாதிரியாக இருக்கின்றன. ஆனால் இவற்றில் ஒன்று ஏனையவற்றி லிருந்து வேறுபட்டது. அந்தப் படம் எது? எப்படி அது வேறுபட்டுள்ளது?



## எண்ணுங்கள். வட்டங்கள் எத்தனை? சதுரங்கள் எத்தனை? முக்கோணங்கள் எத்தனை?



இங்கே மடிக்கவும்

## சிந்தித்து ஊர்களின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள்



1. ஒரு பறவையின் பெயரையும் அம்பு எய்வதற்குப் பயன்படும் கருவியையும் சேர்த்தால் ஊரின் பெயர் வரும்.
2. மனிதனின் உறுப்பு ஒன்றையும் பாம்படிக்க உதவுவதையும் சேருங்கள் ஒரு ஊர் வரும்.
3. ஒரு ஊரின் பெயர் முன்பகுதி பாம்பின் எதிரியாகவும் பின்பகுதி மதுவின் எதிர்ப்பதமாகவும் அமைந்திருக்கிறது.
4. இசைக் கருவிகளில் ஒன்றையும், அம்பைக் குறிக்கும் ஒத்த கருத்துச் சொல்லையும் சேர்த்தால் ஒரு ஊரின் பெயரைக் குறிக்கும்.
5. ஒரு வகை ஊது குழலையும், தும்பிக் கையுடைய மிருகத்தின் பெயரையும் சேர்த்தால் ஓர் ஊரின் பெயர் வரும்.



## முல்லாவின் குதிரை



முல்லாவின் தந்தை முல்லாவைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். சிறிது நேரம் முல்லாவுடன் கதைத்துக் கொண்டிருந்தார். பின்னர் முல்லாவின் குதிரை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கத் தொழுவத்துக்குப் போனார்.

அங்கு குதிரையைக் காணவில்லை. அவருடைய தந்தை திடுக்கிட்டார். பதற்றத்துடன் வீட்டுக்குள்ளே ஓடி வந்து 'முல்லா உன்னுடைய குதிரை காணாமல் போய் விட்டது' என்று படபடப்புடன் கூறினார்.

உடனே அதற்கு முல்லா– அப்பாடா, நான் தப்பித்தேன். நல்லவேளை நான் மட்டும் அந்தக் குதிரையின் மேலே இருந்திருந்தால் நானும் அல்லவா அதனுடன் சேர்ந்து காணாமல் போயிருப்பேன் என்று சொன்னார்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................
கற்கும் பாடசாலை :........................
கற்கும் தரம் :........................
வீட்டு முகவரி :........................
பிறந்த திகதி :........................
ஆர்வமுள்ள துறைகள் :........................

திகதி ............ ஒப்பம் ............

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் : ஜீ. கஜேன்
பாடசாலை : புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.
தரம் : 06
ஆர்வமுள்ள துறைகள் : முத்திரை சேகரித்தல். விளையாட்டு.



பெயர் : ஞீ. சுபராஜன்
பாடசாலை : யாழ்ப்பாணக் கல்லூரி.
தரம் : 05



பெயர் : கே. ஜீலினூட் ரம்யா
பாடசாலை : புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.
தரம் : 04



பெயர் : பீ. ஜெகனா
பாடசாலை : உடுவில் மகளிர் கல்லூரி
தரம் : 07
ஆர்வமுள்ள துறைகள் : கணினி இயக்குதல். புத்தகம் வாசித்தல்

பெயர் : இ. மயூரன்
பாடசாலை : வீரசிங்கம் மகாவித்தியாலயம்
தரம் : 07
ஆர்வமுள்ள துறைகள் : ஓவியம் வரைதல். விளையாட்டு

பெயர் : யோ. மிதுலா
பாடசாலை : வடமராச்சி மத்திய மகளிர் வித்தியாலயம்
தரம் : 10
ஆர்வமுள்ள துறைகள் : பத்திரிகை வாசித்தல் தொலைக்காட்சி பார்த்தல்

# குட்டிகள் அம்மாவை எப்படிக் கண்டு பிடிக்கும்



## செம்மறி ஆடு


செம்மறி ஆடுகள் கூட்டமாக வாழ்பவை. சில நேரங்களில் அம்மா செம்மறி ஆடு தனது குட்டியை இந்தக் கூட்டத்தில் பிரிந்துவிடுவதுண்டு. பெரும்பாலான செம்மறி ஆட்டுக்குட்டிகள் ஒரே மாதிரியானவை. அப்படியென்றால், தாய் செம்மறி ஆடு எப்படித் தனது குட்டியை மீண்டும் கண்டு பிடிக்கும்?

ஒவ்வொரு செம்மறி ஆட்டுக்குட்டியும் தனக்கென்று விசேடமான குரல் ஒலியைக் கொண்டிருக்கும். அம்மாவைப் பிரிந்தவுடன் அவை கத்தும். அந்தக் குரலை வைத்து, தாய் செம்மறி ஆடு தனது குட்டியை அடையாளம் கண்டு கொள்ளும்.

## டொல்பின்

தாய் டொல்பின் தனது குட்டியுடன் கதைக்கும். எங்களுடைய மொழியிலா அவை கதைக்கும்? இல்லை. டொல்பின்களுக்கென்று சில குரல் ஒலிகள் உண்டு. அவற்றில் கிளிக் கிளிக் என்ற சத்தமும் ஒன்று. அவற்றைப் பயன்படுத்தி அவை கதைக்கும்.

185 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தாலும் குட்டி டொல்பின் தனது அம்மா டொல்பினின் குரலை அடையாளம் கண்டுகொள்ளும். அதனால் அவை தமது தாயிடம் இருந்து பிரிந்து விடுவதில்லை.





## கடம்பை மான்


கடம்பைமான் மான். மான் இனங்களில் பெரியது. இவை பனிப்பிரதேசங்களில் வாழ்பவை. தாய் கடம்பை மான், தனது குட்டியை அதனுடைய பின்புறத்திலிருந்து முழங்காலால் முட்டித்தள்ளும்.

தனக்கு களைப்பாக இருந்தாலும் அம்மா தன்னைப் பின்புறத்திலிருந்து தள்ளினால், தான் முன்னுக்கு நடக்க வேண்டும் என்று குட்டிக் கடம்பை மானுக்கு விளங்கிவிடும்.

இங்கே மடிக்கவும்



# நாம் வாழும் உலகம்





ஐஸாக் நியூட்டன் (1642 – 1727) என்னும் பிரபல பிரித்தானிய விஞ்ஞானி, கணிதம், பௌதீகம் ஆகிய துறைகளில் மிகவும் முன்னேற்றம் கண்டதோடு பல புதிய உண்மைகளையும் கண்டுபிடித்தார். ஒரு அப்பிள் மரத்திலிருந்து பழம் கீழ்நோக்கி விழுவதைக் கண்ட இவர் கூர்ந்து சிந்திக்கத் தொடங்கினார். இந்தச் சிந்தனையின் விளைவாகப் பிரபஞ்சத்திலுள்ள பொருட்கள் யாவும் ஒன்றையொன்று கவருகின்றன என்று அறிந்தார்.

இரு பொருட்களின் இடையேயுள்ள ஈர்ப்புச் சக்தியானது, அந்தப் பொருட்களின் திணிவுகளுக்கு நேர் விகித சமமாகவும் அவற்றின் இடையேயுள்ள தூரத்தின் வர்க்கத்துக்கு நேர்மாறு விகித சமமாகவும் இருக்குமெனவும் எடுத்துக் காட்டினார். இதன் விளைவாக சிறியனவும், திணிவு குறைவாகவுமுள்ள பொருட்கள் பெரிய பாரம் கூடிய பொருட்களை ஏன் சுற்றி வருகின்றன என்பது தெளிவாகப் புலப்பட்டது. இவரே முதலில் தெறித் தொலைநோக்கியையும் ஆக்கினார்.

இவரின் ஆராய்ச்சிகளினால் இந்தத்துறை மிகவும் முன்னேற்றமடைந்தது. அதன் பயனாக தவறான நம்பிக்கைகளெல்லாம் கைவிடப்பட்டுப் புதிய கொள்கைகள் நன்கு வலுப்பெற்றன.

## விளையாட்டு

### மரதன் ஓட்டம்

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் மரதன் ஓட்டமும் ஒரு போட்டியாக விளையாடப்படுகிறது. ஒருவர் தொடர்ந்து நிற்காமல் 42 கிலோ மீற்றர் ஓடும் போட்டியே மரதன் ஓட்டம் ஆகும். இந்தப் பெயர் ஏற்பட்ட சுவையான வரலாறு பற்றிப் பார்ப்போம்.

பாரசீகப் படைக்கும் கிரேக்கப் படை க்கும் இடையே சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இறுதியில் பாரசீகப் படையை மரத்தான் என்ற இடத்தில் கிரேக்கப் படை வெற்றி கண்டது. தலைநகரான ஏதென்சுக்கு இந்த வெற்றிச் செய்தியைத் தெரிவிப்பதற்காக பீடிப் பைட்ஸ் என்ற போர் வீரன் இடைவிடாமல் ஓடிச் சென்றான். மரத்தானுக்கும் ஏதென்ஸ் நகருக்கும் இடையிலுள்ள தூரம் 42 கிலோ மீற்றர் ஆகும்.



தொடர்ந்து ஓடி வந்ததன் காரணமாக பீடிப் பைட்ஸ் மூச்சுத் திணறல் ஏற்பட்டு அந்த இடத்திலேயே உயிர் துறந்தான். அந்தப் போர் வீரனின் நினைவைப் போற்றும் விதமாகத் தான் தொடர்ந்து மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்று வருகிறது.

மரதன் ஓட்டம் என்றால் அது 42 கிலோ மீற்றர் தொடர்ந்து ஓடுவதையே குறிக்கிறது. இந்தத் தூரத்துக்கு மேற்பட்ட வேறு எந்தத் தூர ஓட்டமும் நீண்ட தூர ஓட்டம் என்றே அழைக்கப்படுகிறது.

## வீதி விபத்து

இன்று இலங்கையில் கூடுதலான மரணங்கள் வீதி விபத்துக்களாலேயே ஏற்படுகின்றன. வீதி விபத்துக்களும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதைக் குறைக்க யாரும் முன்வரவில்லை. எனவே மக்கள் தான் முன்வரவேண்டும்.

வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. அனேகமான வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் பயண நேரம் தாமதிக்கப்படுவதோடு பயணிக்க வேண்டிய இடத்தைக் குறித்த நேரத்தில் சென்றடைய முடியாத நிலை ஏற்படுகிறது.

இன்று யாழ்ப்பாணத்திலுள்ள அநேகமான வாகனங்கள் போக்குவரத்துக்கு உகந்ததல்லாத நிலையிலேயே காணப்படுகின்றன. இதற்கு ஒரு காரணம் வீதிகள் ஒழுங்கற்றுக் காணப்படுவதாகும்.

வீதி விபத்துக்களைக் குறைக்க இன்றைய இளைஞர்கள் முன்வர வேண்டும். ஏனெனில் அவர்கள்தான் வீதிகளில் அருகருகாகச் செல்பவர்கள். அத்துடன் பெரிய வாகனங்கள் வேகமாகச் செல்வதையும் தவிர்க்க வேண்டும்.

இன்று வீதிகளில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமலும் குடிபோதையிலும் வாகனங்களை ஓட்டுகின்றனர். வீதிப் பொலிஸ்தான் இதில் கவன மெடுக்கவேண்டும்.

மக்களும் தமது பங்களிப்பை முன்வந்து செய்தால், வீதி விபத்துக்களை ஓரளவுக்காவது குறைத்துக் கொள்ளலாம்.

—சு.சபிலயன்—
புனித என்றியரசர் கல்லூரி
இளவாலை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை*
*எல்லாரும் செய்வர் சிறப்பு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வரவு செலவுத்திட்டம் - சிலகருத்துக்கள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு செலவு திட்ட அறிக்கையை - நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்து உரையாற்றும்போது - வழமையான முறைகளில் இருந்தும் மாறுபட்டதும் காலத்தின் தேவைக்கேற்ற வகையிலுமான ஒரு திட்டத்தின் அடிப்படையில் அதனை தயாரித்துள்ளதாக கூறியுள்ளதுடன், இந்த வரவுசெலவுத் திட்டமானது முதன் முறையாக வழமையானதும், பாரம்பரியத் தன்மை கொண்டதுமான வரவுசெலவுத்திட்டமிடல்முறையில்எப்பொழுதும்வெற்றிடமாகவே இருக்கும் இடைவெளிகளை நிரப்பும் தன்மை கொண்டதாக இருக்கும் என்றும் வரவு செலவுத் திட்டங்களின் சமமற்ற தன்மையில் வலுவானதிருத்தம் ஒன்று ஏற்படுவதை உறுதி செய்யும் நோக்கில் அரச வருமானத்தின் வீழ்ச்சி நிலைப் போக்கை தலைகீழாக மாற்றியமைக்கும் தொலைநோக்குச் சிந்தனையுடன் தயாரிக்கப்பட்ட தென்றும் தெரிவித்துள்ளார்.

கலாநிதி சரத் அமுனுகமவின் உரையின் முன்னுரைப் பகுதியில் ஏதோ வித்தியாசமானதும், முன்னேற்றகரமானதுமான கொள்கையைக் கொண்டு புதிய பார்வையுடன் கூடிய அணுகுமுறைக்கான சமிக்ஞை தெரிவது போன்று காணப்பட்டாலும் விடயம் என்னவோ "புதிய மொந்தையில் பழையகள்" என்ற பழமொழியைத்தான் நினைவுபடுத்துகிறது.

கவர்ச்சிகரமான வார்த்தைகளில் எக்காலத்திலும் முழுமையாக நிறைவேற்றவே முடியாத திட்டங்களை அடுக்கிக்கொண்டே போய் மக்களைப் பிரமிப்பிலாழ்த்தி பேய்க்காட்டும் வழமையான கடந்தகால நிதி அமைச்சர்களின் உத்திமுறைகளையே அழுத்தமாகவும் கையாண்டு தனது வரவு செலவுத்திட்ட உரையைத்தயாரித்துள்ளார் என்பதை அதன் உள்ளீட்டை ஊன்றி அவதானிப்பவர் புரிந்துகொள்வர்.

திறைசேரி வெறுமையாகியுள்ள நிலையில் - வருமான வளங்கள் வற்றிவரும் நிலையில் பெரும் செலவினங்களுடன் கூடிய திட்டங்களை முன்வைத்து மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு எந்தவகையிலும் திருப்தி அளிக்காத ஒரு வரவு செலவுத் திட்டத்தையே சரத் அமுனுகம சமர்ப்பித்திருப்பதாக பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு பற்றியும் - மா, சீனி போன்ற பாமரர்களின் அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்பது பற்றியும் அறிவித்தால்போதும் வரவு செலவுத் திட்டம் மக்களின் நன்மை கருதித் தயாரிக்கப்பட்டது என்ற உணர்வை ஏற்படுத்திவிடலாம் என்றே இலங்கையின் நிதியமைச்சர்கள் காலம் காலமாக கருதிவந்துள்ளார்கள் என்பது தெரிந்தவிடயமே.

விலைவாசியுயர்வையும், வாழ்க்கைத்தர வீழ்ச்சியையும் அரசின் சம்பள உயர்வுகள் ஒருபோதுமே சமநிலைப்படுத்தியது கிடையாது.

வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்படாத அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வுகள், அதற்கு அடுத்துவரும் வாரங்களிலோ, மாதங்களிலோ நள்ளிரவுப் பிரகடனங்கள் மூலம் திடீரென அறிவிக்கப்படும் என்பதில் இலங்கை மக்களுக்கு நம்பிக்கை அதிகம்.

இந்த வரவு செலவுத்திட்டமும் அத்தகைய தன்மை கொண்டதேயாகும்.


ஏற்கனவே வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே பாதுகாப்பு மற்றும் இராணுவச் செலவீனத்திற்கு என்று - இந்த சமாதான காலத்திலும் 5630 கோடி ரூபாவை ஒதுக்கத் தீர்மானித்துள்ள அரசு வடக்கு - கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு வரவுசெல்வுத்திட்டத்தில் வெறும் 500 மில்லியன் ரூபாய்களை மட்டுமே ஒதுக்கியுள்ளதை கவனத்தில் கொண்டு பார்த்தால் இது அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட வரவு செலவுத்திட்டம் தானா என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அமுனுகமவின் வரவு செலவுத்திட்டம் வெளியார் உதவியின்றி தயாரிக்கப்பட்டதாக அரச தரப்பால் கூறப்படுகின்றது. குறிப்பாக சர்வதேச நாணயநிதியத்தின் ஆலோசனை பெறப்படவில்லை என்றும் தம்பட்டமடிக்கப்படுகின்றது. ஆனால், இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளின் உதவியின்றி நிதி நெருக்கடியை சமாளிக்க முடியாத நிலையில் நிரந்தரமாகவே உள்ள இலங்கை அரசானது அவர்கள் விதிக்கும் நேரடியான நிபந்தனையை ஏற்கவோ, மறைமுக அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்படவோ வேண்டிய அவசியம் உள்ளதை எவரும் மறுக்கமுடியாது. எனவே தற்போதைய வரவு செலவுத் திட்டம் வெளியார் ஆலோசனையின்றி தயாரிக்கப்பட்டாலும், வெளியார் அழுத்தங்களுக்கு கட்டுப்பட்டு மாற்றப்படவேண்டிய அவசியம் எதிர்காலத்தில் தவிர்க்க முடியாததேயாகும்.

இந்த வரவுசெலவுத்திட்டம் சாமானியர்கள் குறித்து எந்த அக்கறையையும் வெளிப்படுத்துவதாக இல்லை என்று கூறும் முன்னாள் நிதியமைச்சரான ஜி.எல்.பீரிஸ் , பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் எனவும், அதன் விளைவு களை மக்கள் விரைவில் எதிர்கொள்ள நேரிடும் எனவும் எச்சரித்துள்ளதை தட்டிக்கழிக்கவே முடியாது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாத நிலையில் இல்ங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுவரும் சூழலில் 6500 கோடி ரூபாய் நாணயங்களை அச்சிடத் திட்டமிட்டுள்ள ஓர் அரசின் நிதியமைச்சர் உருவாக்கியுள்ள இந்த வரவுசெலவுத்திட்டம் வெறுமனே திட்டங்களை மட்டும் உள்ளடக்கிய ஒன்றேயாகும். இவற்றை நடைமுறைப்படுத்தும் வளவலு எதுவும் இந்த அரசிடம் இல்லை என்பதே உண்மை...

## நாடும் நடப்பும்




# வடக்கு - கிழக்குப் பிரச்சினையை தீர்க்கவே அரசுடன் இணைந்தேன்

## கட்சி தாவிய அமைச்சர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவி வழங்குவதற்காகத் தென்பகுதியின் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டுமென்று, நேற்றுமுன்தினம் கட்சி தாவிய அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்தார்.

அரசாங்கத் தரப்பின் ஆசனத்தில் அமர்ந்த அமைச்சர்-சபாநாயகரின் அனுமதியுடன் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவதற்காகவே, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்தேன்,

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைப்பேரவையில் தென் பகுதியின் சகல அரசியல் கட்சிகளும் இணைந்து, தமது கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்பதாகத் தேசிய ஆலோசனைப் பேரவையில் இது குறித்து இணக்கபாடு ஒன்றை ஏற்படுத்த முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற காலத்திலும் அவர்களது நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்கிச் செயற்படவேண்டுமென்ற கொள்கையிலேயே நாம் இருந்தோம்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அதிகளவிலான உதவிகள் தேவைப்படுகிறது, நாட்டின் எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் தென்பகுதி அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்து கொண்டே, ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்திருந்ததாக அமைச்சர் போகொல்லாகம மேலும் தெரிவித்தார்.

# தேசியத் தலைவரின் பிறந்தநாளை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசியத் தலைவரும், தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமுமான விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளை வெகு விமரிசையாக யாழ். மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களும் கொண்டாட வேண்டுமென, யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம், சகல சனசமூக நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது.

அன்றைய தினம் தானத்தில் சிறந்த இரத்ததானத்தை வைத்தியசாலைகளிலுள்ள இரத்த வங்கிகளின் ஊடாக இயன்றவர்கள் செலுத்தலாம். எமது பிள்ளைகளின் பிறந்த நாளை எப்படிக் கொண்டாடுகிறோமோ இது போன்று கேக், இனிப்புப் பண்டங்களை மற்றவர்களோடு பகிர்ந்தும் கொண்டாடலாம். அத்தோடு உணர்வுபூர்வமாக நிகழ்ச்சியை நடத்தியும் சிறப்பாகக் கொண்டாடுவது தமிழ் மக்களாகிய எமது கடமையாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பாக அதன் தலைவர் சு.பரம்சோதி யாழ். மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலைய நிர்வாகிகளையும் - பொதுமக்களையும் கேட்டுள்ளார்.

## கிளிநொச்சிக்குச் செல்வதாகக் கூறிச்சென்ற மகனைக் காணவில்லையென முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியிலிருந்து கிளிநொச்சி செல்வதாகக் கூறிக் சென்ற தனது மகனைக் காணவில்லையென, அவரது தாயார் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த 20 வயதான பசுவதி கஜேந்திரன் என்பரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி உரும்பிராயில் இருந்து கிளிநொச்சியில் அமைந்துள்ள அக்காவின் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, சென்றவர அங்கு போய்ச் சேரவில்லையென இவரது தாயார் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

## 752 இலக்க பஸ்சேவையை சீராக நடத்துமாறு கோரிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறையிலிருந்து - வல்வெட்டித்துறை, தொண்டமனாறு ஊடாக யாழ்ப்பாணத்துக்கு போக்குவரத்தில் ஈடுபடும் 752 இலக்க பஸ் சேவை, அடிக்கடி திடீரென நிறுத்தப்படுவதாக பயணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாதையால் பருத்தித்துறையிலிருந்து 10 மணிக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து 12.30 மணிக்கும் முறையே யாழ்ப்பாணம், பருத்தித்துறைக்கு சென்று வரும் ஒரேயொரு பஸ்சேவையை அடிக்கடி எந்தவித அறிவிப்பும் இன்றி நிறுத்தம் செய்வதால், வல்வெட்டித்துறை, ஊரிக்காடு, மயிலியதனை, தொண்டமனாறு ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின் றனர்.

ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டும் நடத்தப்படும் இந்த பஸ்சேவையை ஒழுங்காக நடத்தி, இந்தப் பகுதி மக்களின் சிரமங்களைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(14)

## மதுவரித்திணைக்கள சட்டங்களை மீறுவோர் மீது நடவடிக்கை

### திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மதுவரித் திணைக்களச் சட்டங்களை மீறுபவர்கள் மீது இறுக்கமான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யாழ்.மதுவரித் திணைக்களம் தெரிவித்தது.

யாழ். மாவட்டத்தில் மதுபானச்சாலைகளில், மது போதையில் இருக்கும் நபருக்கு, மதுபானம் கொடுப்பது, 21 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு மதுபானம் விற்பது, பெண்களுக்கு மதுபானம் விற்பது, மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு மதுபானம் விற்பது, கடமையில் இருக்கும் மதுவரித் திணைக்கள அதிகாரிக்கோ, பொலிஸ், இராணுவத்தினருக்கு மதுபானம் விற்பது, பேரணிகள், ஊர்வலங்கள் நடைபெறும்போது மதுபானச்சாலைகளைத் திறந்துவைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள்மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மதுவரித் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் மதுபான உற்பத்திகளைத் தவிர, மாதம் ஒரு முறை 25 ஆயிரம் போத்தல் பியரும், 125 ஆயிரம் போத்தல் சாராயமும் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

(தீ)

## சிறுவர் உரிமைதினம்...

- சந்துரு

# இடது கையால் கொடுத்து, வலது கையால் பறிக்கப்படும் சிறுவர்களது உரிமைகள்

இன்று எம்முன் துள்ளிக்குதித்தோடி முல்லைச் சிரிப்புதிர்க்கும் இந்தச் சின்னஞ் சிறு மனிதக் குஞ்சுகள் தான் நாளை இந்தத் தேசத்தை வழிப்படுத்தப்போகும் சிற்பிகள். ஆம், பிள்ளைப் பருவம் என்பது மானிட வாழ்வின் முக்கிய பருவமாகும். தமிழ்ப் பாரம்பரியத்திலே வயது, வளர்ச்சி அடிப்படையில் ஆண்களையும்; பெண்களையும் பல்வேறு பருவங்களுக்கு உரியவர்களாக வகுத்துக் கூறுவது வழக்கமாகும். அதனடிப்படையில் பார்க்கும் போது, பெண்களில் பேதை (5 வயது - 8 வயது) பெதும்மை (9 வயது 10 வயது) மங்கை (11 வயது - 14 வயது) மடந்தை (15 வயது - 18 வயது) என்ற பருவத்துக்குட்பட்டவர்களும், ஆண்களைப் பொறுத்தவரை பாலன் (1 வயது - 7 வயது) மீளி (8 வயது - 10 வயது) மறவோன் (11 வயது - 14 வயது) திறலோன் (15 வயது) காளை (16 வயது) மற்றும் விடலைப் பருவத்து முன் இரு ஆண்டுகளும் சேர்ந்த பருவமாகவே இங்கு நாம் நோக்கும் பிள்ளைப் பருவம் அடக்கப்பட்டுவிடுகிறது. இன்று சர்வதேச ரீதியில் 18 வயதுக்குட்பட்ட அனைவருமே சிறுவர்கள் என்ற வரையறைக்குள் சுட்டிக்காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்தச் சிறுவர்கள் எதிர்காலத்தில் சாதனையாளர்களாகவா? அல்லது வேதனையாளர்களாகவா? இருக்கப் போகின்றார்கள் என்பதைத் தீர்மானிக்கப் போகும் பருவம் இந்தப் பருவம்.

ஒரு பிள்ளை தனது பிள்ளைப் பருவத்திலே அனுபவிக்க உரித்துடைய அனைத்து உரிமைகளையும் உரிய வகையில் அனுபவிக்கும் சட்டபூர்வ உரிமையைக் கொண்டிருக்கின்றது. இது மட்டுமன்றி, பிள்ளைப் பருவத்தில் அவர்களுக்குரிய உடல், உள முதிர்ச்சி இல்லாதிருப்பது காரணமாக, வளர்ந்தவர்கள் அந்தப் பிள்ளையின் மீது பிறப்புக்கு முன்பிருந்தே விஷேடமான அக்கறை செலுத்த வேண்டும் என்பதும் சர்வதேசத்திலேயும் ஏற்கப்பட்டுவிட்ட நியதியாகின்றது. இந்த நியதியின அடிப்படையில் வளர்ந்தோர் மீது பிள்ளைகள் தொடர்பாக பல நிறைவேற்றப்பட்ட வேண்டிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருககின்றன. இந்தப் பொறுப்புக்களே பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களது உரிமைகளாக ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே வளர்ந்தவர்கள் தமது பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்றும் போது, சிறுவர்களது உரிமைகள் பேணப்படும் என்பது யதார்த்தமாகின்றது. மாறாக, வளர்ந்தவர்களால் தமக்குரிய பொறுப்புக்களை எங்கெங்கு ஒழுங்காக நிறைவேற்றப்படாது தட்டிக் கழிக்கப்படுகிறதோ - புறக்கணிக்கப்படுகிறதோ அங்கே சிறுவர்களது உரிமைகளும் மறுக்கப்படுகின்றன - அபகரிக்கப்படுகின்றன என்பதே உண்மையாகின்றது.

எனினும், இன்று நடைமுறையில், சிறுவர்களது உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களே அதிகமாக உள்ளன. மீறப்படுகிறது. என்று கூறுவதைவிட, சிறுவர்களிடம் இருந்து அவர்களது உரிமைகள் பறித்தெடுக்கப்படுகின்றன என்பதே உண்மையாகும். இவ்வாறு பறித்தெடுப்பவர்கள் கூட யார் என நோக்கினால் சிறுவர்களுக்கான உரிமைகள் வழங்கப்படுவதை தமது பொறுப்பாகக் கொண்டுள்ள வளர்ந்தவர்களாலேயே பறிக்கப்படுகின்றன என்பதே வேதனை தருவதாகவுள்ளது.

உலகில் பல்வேறு நாடுகளிலும் உள்ள சிறுவர்களிடையே காணப்படும் உரிமைப் பறிப்பானது 1923 இற்கு முன்பாகவே அவதானிக்கப்பட்டன. அதன் விளைவாக 1923இல் எக்லான்ரைப் ஜெக் என்பவர் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை வரைந்தார். இதுவே 1924 ஆம் ஆண்டில் சிறுவர் உரிமைகள் பற்றிய ஜெனிவாப் பிரகடனத்தை தோற்றுவித்தது எனலாம். 1959 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை உருவாக்கவும், இதுவே தோற்றுவாயாக அமைந்தது. அத்துடன் அது உலகின் அனைத்து நாடுகளிலுமே சிறுவர், சிறுமியர்கள் மிகமிகக் கஷ்டமான நிலைகளிலேயே வாழ்கின்றார்கள் என்பதையும் ஏற்றுக் கொண்டது.

எனினும் சர்வதேச ரீதியாக சிறுவர்கள் பாதிக்கப்படுவதை இவை கட்டுப்படுத்தும் வலுவற்றவனவாகவே நடைமுறையில் காணப்பட்டன. இது காரணமாக சிறுவர்களது உரிமைகள் மேலும் பேணப்படல் வேண்டும் என்ற கருத்து வலுப்பெற, 1979 ஆம் ஆண்டை சர்வதேச சிறுவர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியதோடு, சிறுவர் உரிமை சமவாயத்தை வரைவதற்கான செயற்குழு ஒன்றையும் உருவாக்கியது. இந்தச் செயற்குழுவால் முன்வைக்கப்பட்ட 54 உறுப்புரைகளைக் கொண்ட சிறுவர் உரிமைச் சமவாயத்தில் முதல் 41 உறுப்புரைகளும் சிறுவர் உரிமைகள் பற்றியதாகவும் ஏனையன பொதுவானதாகவுமான விதிகள் அடக்கப்பட்டிருந்தன. ஐக்கிய நாடுகளது சபையால் இந்தச் சிறுவர் உரிமைச் சமவாயமானது 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் 1990 செப்ரெம்பர் 2 ஆம் திகதி முதல் அனைத்து உலக சட்டமாகவும் கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் சர்வதேச ரீதியில் சிறுவர்கள் எதிர்நோக்கிய இம்சைகளில் இருந்து விடுபட்டு, தமக்கேயுரிய பல்வேறு உரிமைகளை அனுபவிக்க சட்டபூர்வமான பாதுகாப்பு ஒன்று வழங்கப்பட்டது.

இந்தச் சர்வதேச சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் 1990 ஜனவரி 26 ஆம் திகதி ஒப்பம் இட்டதன்மூலம் இலங்கையும் சிறுவர்களது உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்த சர்வதேச சமூகத்துடன் இணைந்து கொண்டது. 1991 ஜுலை 12 இல் இலங்கை தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியதுடன், 1991 ஒகஸ்ட் 11 ஆம் திகதி முதல் இலங்கைத் தீவிலும், இந்தச்சிறுவர் உரிமைச் சமவாய உறுப்புரைகளை நடைமுறைப்படுத்தும் ஆணையைப் பிறப்பித்தது. இதன் ஒரு செயற்பாடாக 1991 டிசம்பரில் சிறுவர்களுக்கான செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதோடு, 1992 செப்ரெம்பரில் சிறுவர் பட்டயத்தையும் உருவாக்கியது. இவற்றின் படிமுறை வளர்ச்சியாக, தற்போது மாவட்டங்கள் தோறும் மாவ்ட்ட செயலகங்களில் சிறுவர் கண்காணிப்புக் குழுக்கள்- மாவட்ட செயலர் தலைமையில் அமைக்கப்பட்டிருப்பதோடு, ஒருசில மாவட்டங்களில் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு என்பதும் அமைக்கப்பட்டு, அவற்றினூடாகவும் சிறுவர் உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முயற்சித்துள்ளது. தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மட்டும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் அந்த அந்த மாவட்ட மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்பது எமது பிரதேசத்தில் உலாவிவரும் முதுமொழியாகும். எமது நாட்டில் எழுத்தில் வடிக்கப்பட்ட சட்டக்கட்டுப்பாடுகள் எவ்வளவுதான் இருந்தாலும், எம் இளஞ் சிறுவர்களுக்கு அதனால் பெரிதான நன்மைகள் எவையும் கிடைக்கவில்லை என்பதே யதார்த்தமாகும். ஏற்கனவே வரையப்பட்டுவிட்ட இலங்கையின் நீதித்துறை சார் சட்டவிதிகளுக்கும், 1991 இல் இலங்கை ஏற்றுக் கொண்ட சிறுவர் உரிமை சமவாய உறுப்புரை விதிகளுக்குமிடையிலும், மறறும் மனித உரிமை தொடர்பான விதிகளுக்கு இடையிலும் ஒருங்கிணைப்புத்தன்மை இல்லாமையே இதற்குக் காரணமாக இருக்கலாமா? எனற கேள்வி இனறு சிறுவர் உரிமை தொடர்பான ஆவலர்களிடம் பரவலாக மேலோங்கியுள்ளது. இதனால் தான் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களில் பலர் குறைந்த தண்டனைகளோடு தப்பிக் கொள்ளும் நிலைமையை அவதானிக்க முடிகிறது என்பது அவர்களது வாதமாகும்.



இன்று வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள எமது இளஞ்சிறார்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள் தொடர்பாக ஆராயும் போது, அவற்றுள் பிரதானமானவையாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்.

### வீடுகளிலேயே மறுக்கப்படும் உணர்வுகளும் உரிமைகளும்

போர்ப்பயம், வறுமை, கல்வியறிவின்மை போன்ற பிரதான காரணங்களால், எமது பகுதிகளில் இன்று பெரும்பாலான சிறுவர்களது உரிமைகள் வீட்டிலேயே மறுக்கப்படுகின்றன. குறிப்பாக சிறுமிகள் தொடர்பில் இந்தக் காரணிகளால் எமது பகுதிகளில் உரிமை மீறல்கள் அதிகமாகவே நடைபெறுவதை அவதானிக்க முடியும். பாடசாலைகளிலும், வீடுகளிலும் கூட பிள்ளைகள் சாதாரணமாக ஒழித்து விளையாடுவதற்குப் பதிலாக இராணுவம் - புலி விளையாட்டு என்று கூறி தடித்துண்டுகளைத் துப்பாக்கி வடிவில் அமைத்து, சுட்டு விளையாடுவதிலேயே அதிக ஆர்வமும், விருப்பமும் காட்டுவதுடன், அவர்களிடையே முரண்பாடுகளும், பிணக்குகளும் அடிக்கடி உருவாகி, அடிதடியில் இறங்கும் அளவுக்கு வன்முறைக்குணம் மிக்கவர்களாக வாழும் ஒரு மனப்பாங்கை அவதானிக்க முடிகிறது. இதுவே பெற்றோரை, ஆசிரியரை, மூத்தோரை மதிக்காது நடத்தல் என்ற விளைவுகளுக்கு அடிகோலியது எனலாம். இன்னுமொரு பக்கத்தில் சிறுவர் உழைப்பு என்ற ஒரு நிலைக்கும் மேற்குறிப்பிட்ட காரணிகளே காரணம் எனலாம்.

### பாடசாலைகளில் மறுக்கப்படும் உரிமைகள்:

கல்விப்புலம் சார் அனைவருமே குறிப்பாக ஆசிரியர் சமூகம், சிறுவர் உளவியல் தொடர்பான தகைமைச் சித்திகளைப் பெற்றவாகளாகவே இருப்பினும், அவர்களில் பெரும்பான்மையோர் இன்றுகூட ஆண்டான் அடிமைச் சிந்தனைப் போக்கோடு மாணவர்களை அணுகும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர். இன்றுள்ள ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க வீதத்தினர், தமது மாணவப் பருவத்தில் ஆசிரியர்களிடமிருந்து மோசமான தண்டனைகளைப் பெற்றவர்களாகவும், பாரம்பரியக் கல்வி முறையில் வளர்த்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருப்பதனால், அவர்களால் சிறுவர் உரிமைகள் பற்றிய எண்ணக்கருக்களை இலகுவாக ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பது வியப்பல்ல. "பிள்ளைய வைக்க வேண்டிய இடத்தில வைக்காட்டி எங்கள மதிகாதுகள் வீணாக் கெட்டுப் போயிடுவாங்கள்" என்ற காரணப்படுத்தல்களோடு தண்டனைகள் வழங்கப்படுவதையே வழக்கமாகக் கொண்ட ஒழுங்காற்றுக் குழு ஆசிரியர்கள் எம் மத்தியில் தடியுடன் உலாவி வருவது கற்பனையான ஒரு வார்த்தையல்ல. இந்தவருட ஆரம்பத்தில் தரம் ஒன்றில் அனுமதிக்கப்பட்ட ஒரு சிறுமி. முதல் வாரத்திலேயே பெற்ற தடியடி காரணமாக இன்று கூட பாடசாலைக்குச் செல்வதற்கு அழுது பின் நிற்பதோடு, தனக்கு வயிற்றுக்குத்து இருப்பதாக கூறித்துடிக்க, பெற்றோர் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அலைக் கழிவதை நான் கண்டு அனுபவித்துள்ளேன்.

### சிறுவர்கள் தமது வாழும் உரிமையை இழத்தல் (பறி கொடுத்தல்)

உலகில் பல்வேறு நாடுகளிலும் நிகழும் சட்டவிரோதமான கருச்சிதைவுகளின் எண்ணிக்கை தினம் தோறும் ஒரு லட்சத்தைத் தாண்டுவதாக, ஐக்கிய நாடுகள் குழந்தை நிதயம் கூறுகிறது என, பிள்ளைகளின் உரிமைகள் பற றிய சட்டங்கள் என்ற நூலில் சமர சிங்க குணசேகர என்பவர் குறிப்பிடுகின்றார். இந்த அறிககையின்படி, ஒவ்வொரு வாரமும் இரண்டரை லட்சம் சிசுக்-களுக்கு மேல் இறக்கின்றன. இவற்றிலும் அதிக எண்ணிக்கையான சிசுக்கள் போசாக்கின்மை. தொடர்ந்தும் தாக்கி வரும் நோய்கள் என்பவற்றோடு வாழ்ந்து கொண்டிக்கின் றனர். இலங்கையில் கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சினால் கடந்த வருடத்தில் வெளியிடப்பட்ட "மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள்" என்ற அறிக்கையில் (வடக்கு கிழக்குப் பகுதியை தவிர்த்த தரவுகள்) ஒவ்வொரு 5 சிறுவரிலும் ஒருவர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 5வயதுக்கு குறைந்த பிள்ளைகளில் 38%மான பிள்ளைகள் போசாக்குக் குறைபாடு உடையவர்களாக இருப்பதாகவும், சுட்டிக் காட்டியுள்ளது. அத்துடன் 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில்- ஆயிரத்துக்கு 21 குழந்தைகள் இந்தக் காரணங்களால் இறப்பதாகவும் கூறியுள்ளது. இவ்வாறு ஒரு குழந்தை இறக்கும் போது, பல குழந்தைகள் ஊமையாக, குருடாக, உளப் பின்னடைவுகளை உடையவர்களாக மாறும் நிலை எம்மைப் போன்ற வறுமையான நாடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

வட-கிழக்குப் பகுதிகளில் இந்த வகைப் பிரச்சினைகளது தாக்கம் குறைவானதாக இருப்பினும், பிரச்சினைக்குரிய இந்தக்காரணிகள் இல்லை என்ற சந்தோசத்தில் குதித்து விடமுடியாது. பிறந்த குழந்தையை காலால் மிதித்துக்கொன்று புதைப்பதும், சட்டத்துக்குப் புறம்பான வகையில் கருக்கலைப்பில் ஈடுபட்ட தாய் இறந்து போவதும், குடிவெறியில் தந்தையார் மகனது கழுத்தைச் சீவியதுமான செய்திகள் எமது தினசரிகளில் அடிக்கடி வரும் ஒன்றாகும்.

### பிள்ளைகளுக்கு எதிராக திருப்பப்பட்ட போர் நடத்தைகள்

உலகில் குண்டு வீச்சு, கண்ணிவெடி, துப்பாக்கிச் சூடு, சித்திரவதைகள் போன்றன 'காரணமாக உயிரை இழத்தல், அங்க வீனமாதல், உளப்பாதிப்பை அடைதல் போன்ற வகையில் ஏறக்குறைய ஒரு மில்லியன் வரையிலான சிறுவர்கள் ஆண்டு தோறும் பாதிக்கப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பொதுவாக யுத்தத்தின் போது பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களும் பெண்களுமே என, ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் எடுத்துக் கூறுகிறது. இலங்கையில் கூட கடந்த இருபது வருட யுத்தத்தின் விளைவாக பாதிக்கப்பட்டவர்கள் அதிகமானவர்கள் சிறுவர்களும் பெண்களுமேயாகும். வடகிழக்கில் வவுனியா, முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய ஆறு மாவட்டங்களில் மட்டும் 46% அதிகமான சிறுவர்கள் அநாதைகளாக உள்ளதாக புள்ளிவிபர அறிக்கைகளில் இருந்து அறியமுடிகிறது. இதே பகுதிகளில் யுத்தம் காரணமாக பாடசாலைக் கட்டடங்கள் உட்பட கல்விசார் வளங்கள் அனைத்துமே சிதைக்கப்பட்டன. குறுகிய காலப்பகுதிகளுக்குள் பல இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. இது காரணமாக எமது பகுதி நலன் காக்கும் நிலையங்களில் 12,000இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அநாதைகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களுள் அதிகமானவர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு இடங்களிலுள்ள புனர்வாழ்வு இல்லங்களில் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. போர் நடவடிக்கைகள் காரணமாக வீதியோர வடிகால்களில் இருந்தும்கூட, தாம் குழந்தைகளைக் கண்டு பிடித்து, எடுத்து வளர்ப்பதாக இந்த புனர்வாழ்வு இல்லப் பொறுப்பாளர்கள் கூறும் போது, யுத்தத்தின் விளைவுகள் கோரமாய் எம்முன் எழுந்து நிற்பது பயத்தைத் தருகிறது. நாகர்கோயில் படுகொலையான சிறுவர்களும், நவாலி தேவாலயத்தில் இறந்த சிறுவர்களும், மட்டு நகரில் பொசன் திருவிழாவின் போது கோரமாக கொலையுண்ட சிறுவர்களும், எமது தேசத்தில் சிறுவர் உரிமைகளுக்கு மட்டுமல்ல, சிறுவர்களது உயிர்களுக்கு கூட வழங்கப்படும் மதிப்பைச் சுட்டி நிற்கின்றன. இத்தனையும் இலங்கை அரசு சிறுவர் உரிமைச் சமவாயத்தில் ஒப்பமிட்டு உறுதி செய்த காலத்துக்கு பின்னரேயே மேற்கொள்ளப்பட்டவை என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

### சிறுவர் உழைப்பும் சிறுவர் துஷ்பிரயோகமும்

எமது நாட்டில் மட்டுமன்றி உலகின் நாலா பக்கங்களிலும் சிறுவர்களது உழைப்பைச் சுரண்டும் நடவடிக்கைகளும், அவர்களைப் பாலியல் ரீதியில் இம்சைப்படுத்தும் நடவடிக்கைகளும் பெரியளவில் இடம்பெற்று வருவதைச் சர்வதேச தொண்டு நிறுவனங்களும், சிறுவர் உரிமை ஆர்வலர்களும் பரவலாக ஏற்றுக் கொள்கின்றனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளது உழைப்பாளர் படையிலேயே 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளது தொகை 75 மில்லியனிலும் அதிகம் என, சர்வதேச தொழில் நிறுவனத்தின் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இலங்கையில் மட்டும் வறுமை காரணமாக தமது பெற்றோருக்கு உதவும் நோக்கில் வாழ்க்கையின் வனப்பான நாட்களை அர்ப்பணித்து, 10 வயதிலும் குறைந்த இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சிறார்கள் தமது உழைப்பை விற்கத் தூண்டப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்படுகிறது. ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் ஆதரவோடு கலாநிதி ஏ.ஈ. வீரமுண்ட என்பவர் மேற்கொண்ட ஆய்வின் பேறாக, இலங்கையில் குழந்தைத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தமது குடும்ப வருமானத்துக்கு கணிசமான பங்களிப்பைச் செய்வதற்காக, தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் இந்தவகைச் சிறுவர்களது உரிமையை மீறுபவர்களில்- அவர்களது உழைப்பை உறுஞ்சுபவர்களில் பிரதானமானவர்களாக வறுமையில் வாடும் பெற்றோர்களே காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார். இவரது ஆய்வில் அறியப்பட்ட வேதனையான விடயம் யாதெனில் குழந்தை தொழிலாளர்களில் 44 வீதமானவர்கள் தமது உழைப்புக்கு ஈடாக உணவை மட்டுமே பெற்றுக்கொள்கின்றனர் என்ற உண்மையாகும்.

இவ்வாறான ஆய்வுக்கும், நாம் அனுபவிக்கும், அறிந்து கொள்ளும் நிகழ்வுகளும் நமக்கு எதனைப் புரிய வைக்கிறது? புரிய வைக்க முற்படுகிறது? என்பதை வளர்த்தவாகளும் , அதிகாரத்தை (தத்தமக்கேயுரிய அதிகாரத்தை) கைகளிலே கொண் டுள்ளவர்களுமான நாம் சிறிது நேரம் சிந்திக்க முற்படுவோமாயின், அதுவே எம் சிறார்களது ஒளி மயமான வாழ்வுக்கான விடிவெள்ளியாக அமையும் என்பது நிச்சயமாகும். ❄

### அமெரிக்க அதிபர் புஷ்ஷை விமர்சித்த

# கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்



அமெரிக்க அதிபர் புஷ்ஷை வெளிப்படையாக விமர்சித்தார் எனத் தெரிவித்து ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கனடா பிரதமர் பதவி நீக்கம் செய்துள்ளார்.

ஆளும் லிபரல் கட்சியைச் சேர்ந்த கரோலின் பரீஸ் என்பவரே இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டவராவார்.

கடந்த புதன்கிழமை தொலைக் காட்சியொன்றின் நகைச்சுவை நிகழ்ச்சியில் தோன்றிய கரோலின் அமெரிக்க அதிபர் புஷ்ஷை மிகவும் கீழ்த்தரமாகப் பேசியதுடன் அவர் ஒரு போர் வெறியரெனவும் நடித்துக்காட்டியிருந்தார்.

இதனையடுத்தே இவரை கனடாப் பிரதமர் போல் மார்ட்டின் பதவியிலிருந்து நீக்கியதுடன் கரோலினின் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை எனவும் தெரிவித்தார்.

பிரதமர் போல் மார்ட்டின், கரோலினை பதவிநீக்கம் செய்தமையானது ஏற்கனவே சிறுபான்மையாக உள்ள லிபரல் கட்சியை மேலும் பலவீனமாக்குமென செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

# பலூஜா நகருக்கு கிளர்ச்சிவாதிகள் செல்லும் சகல வழிகளும் தடையாம்

## அமெரிக்க இராணுவம் தெரிவிப்பு



பாரிய தாக்குதலின் பின்னர் ஈராக்கின் பலூஜா நகரைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த அமெரிக்க மற்றும் கூட்டுப்படைகளால் மீண்டும் தீவிரவாதிகள் பலூஜா நகருக்குள் பிரவேசிப்பதற்கான அனைத்து வழிகளையும் தடைசெய்திருப்பதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஈராக்கின் பலூஜா நகரிலிருந்து அனைத்துத் தீவிரவாதிகளும் விரட்டியடிக்கப்பட்டதாகத் தெரிவித்த அமெரிக்கப்படை அதிகாரியான ஜெனரல் ஜோன் சற்றலர் ஆங்காங்கே ஒளிந்துள்ள தீவிரவாதிகளை படையினர் தேடி வருவதாகவும் தெரிவித்தார்.

பலூஜா நகரைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இதுவரையில் 51 அமெரிக்கப் படையினரும் 8 ஈராக்கியப் படையினரும் பலியாகியுள்ளதாகவும் 1200 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் அமெரிக்கப்படையினர் பலூஜா நகரரைத் தொடர்ந்தும் தமது கண்காணிப்பின்கீழ் வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் ஈராக்கியத் தீவிரவாதிகள் மீண்டும் பலூஜா நகரில் பலம் பெற்றுவிடுவார்கள் என அமெரிக்கக் கடற்படையின் புலனாய்வுத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பலூஜா நகரில் மின்சாரம் மற்றும் குடிநீர் அற்ற நிலையில் பொது




மக்கள் அவஸ்தைப்படுவதாகத் தெரிவித்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பலூஜா நகரில் ஆங்காங்கே தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதால் காயமடைந்த பொதுமக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்தது.

பலூஜா நகரில் சேதமடைந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அத்துடன் அங்கிருந்து வெளியேறிய பொதுமக்கள் மீளக்குடியமர்வதற்காக ஒவ்வொருவருக்கும் தலா 100 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் எனவும் ஈராக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம் பலூஜா நகரில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமெரிக்கப் படைகளுடன் பேச்சுக்களை நடாத்தி வருகின்றது.

## வட பிராந்திய போக்குவரத்துச்சபை - கோண்டாவில்

### வழங்குநர்களையும் சேவைகளையும் பதிவு செய்தல் - 2005

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு வ.பி.போ.சபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநரிடமிருந்து விண்ணப்பங்கள் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

1. பேருந்துகளுக்கான உதிரிப்பாகங்கள். வழங்கப்பட வேண்டிய பேருந்துகளின் இனம் பின்வருமாறு:-
   அ) லேலண்ட், லங்கா அசோக் லேலண்ட்
   ஆ) டாட்டா - 1210 எஸ்ஈ, 1313 (டிமோ)
   இ) கிறேட் வோல் (சீனத் தயாரிப்பு)

2) வில்லுத்தகடுகள்
3) ரயர், ரியூப் வகைகள்.
4) பற்றரி, அசிட் வகைகள்.
5) மின் உபகரணங்கள், மின் சாதனங்கள்.
6) பிளாஸ்டிக் கண்ணாடி, பாதுகாப்புக் கண்ணாடி வகைகள்.
7) சகல வகையான இரும்புப் பொருட்கள், ஆணி வகைகள், சோல்டறிங் ஈயம், இனமால் பெயின்ட் வகைகள், அலுமினியம் சீற், கல்வனையிஸ்ட் சீற்.
8) அலுவலக மரத்தளபாடங்கள்.
9) அலுவலக உபகரணங்கள், ஸ்டில் அலுமாரி, ஸ்டில் கபினெற்கள்.
10) காகிதாதிகள்.
11) கணினி இயந்திரங்களுக்கான உபகரணங்கள்.

**சேவைகள்:**

1) அச்சிடுதல் - ரிக்கற் புத்தகங்கள், பொதிச் சீட்டுக்கள், வழிப்பட்டியல்கள், ஆகிய பலதரப்பட்டவை.
2) அலுவலக தட்டச்சு திருத்துதல், பக்ஸ் இயந்திரம் திருத்துதல், போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் திருத்துதல்.
3) கடைச்சல் வேலை செய்தல்.
4) டீசல் இன்ஜெக்ரர் பம்புகள் திருத்துதல் மற்றும் இவற்றுக்கான இன்ஜெக்ரர்கள், நொசில், பம்ப் இன்ஜெக்ரர் எலிமென்ற், வால்பு ஆகிய உபகரணங்கள்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல்கள், சேவைகள் - 2005" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1) வழங்கலுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் தலைவர் கூறுவலைச் சபை, வ.பி.போ.சபை, பலாலி வீதி, கோண்டாவில் என முகவரி இடப்படல் வேண்டும்.

2) ஒவ்வொரு வழங்கல், சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 100/= காசாக/காசுக்கட்டளையாக/தபால் கட்டளையாக பிராந்தியக் கணக்காளரின் பெயரில் பெறப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கோரப்படும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்துக்கு பொருட்கள்/ சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1) விண்ணப்பிக்கும் வழங்கல் / சேவை
2) பெயரும் விலாசமும்.
3) தொலைபேசி இலக்கம்.
4) வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும்.
5) வியாபாரத்தின் தன்மை
6) வங்கியாளரின் பெயர்.
7) எமக்குக் கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் / கால எல்லை.

குறிப்பு:- சேவைகள் வழங்கலுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக் காரியாலயத்தில் விநியோக அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**க.கணேசபிள்ளை,**
பொதுமுகாமையாளர்,
வ.பி.போ.சபை, கோண்டாவில்.

(C/3337)

### டர்பூர் வன்செயலை முடிவுக்கு கொண்டுவர

# சூடான் அரசு - கிளர்ச்சிவாதிகள் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்து



சூடானின் டர்பூர் பிரதேசத்தில் நிலவும் வன்செயல்களை இந்த வருடம் முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் தென்பகுதிக் கிளர்ச்சிக் குழுவினரும், சூடான் அரசாங்கமும் சமாதான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கென்ய தலைநகர் நைரோபியில் கடந்த இரண்டு நாட்களாக விசேடமாக நடைபெற்ற ஐ.நா.பாதுகாப்புச் சபையின் கூட்டத்திலேயே இந்தச் சமாதான ஒப்பந்தத்தில் இரு பகுதியினரும் கைச்சாத்திட்டனர்.

இந்தச் சமாதான ஒப்பந்தம் மூலம் டர்பூரில் நிலவிவரும் வன்செயல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்படுமென தான் நம்புவதாக ஐ.நா.செயலர் கொபி அனான் தெரிவித்தார்.

இந்தச் சமாதான ஒப்பந்தம் மூலம் டர்பூர் பிரதேசத்தில் சமாதானத்தை இந்த வருடம் டிசெம்பர் 31ம் திகதிக்குமுன் ஏற்படுத்த வேண்டுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

டர்பூர் பிரதேசத்தில் நிலவும் வன்செயல்களைத் தீர்ப்பதற்கு ஐ.நா.எடுத்துள்ள தீர்மானம் மிகவும் நல்லதெனவும், நடுநிலமையானதெனவும், ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் டன்போர்த் தெரிவித்தார்.சூடானில் கடந்த 21 வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக இரண்டு மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செயற்கை வாலுடன் டொல்பின் மீன்





மனிதர்களுக்கு கை, கால் இழந்தால் செயற்கைக் கை மற்றும் கால் பொருத்திக்கொள்ளலாம். ஆனால் மீன்களுக்கு வால் மற்றும் துடுப்பு துண்டாகிவிட்டால் அவைகளின் கதி என்ன ஆகும்? அவற்றுக்கும் வழி இருக்கிறது. ஜப்பானின் ஒகினவா மீன் காட்சியகத்தில் உள்ள டொல்வின் மீனுக்கு திடீரென்று நோய் ஏற்பட்டது. இதில் அந்த மீனின் வால் துண்டாகி விட்டது.

நீந்த முடியாமல் தவித்த அந்த மீனுக்காக செயற்கை வால் ஒன்று தயாரித்தனர். ரப்பர் இழைகளால் ஆன செயற்கை வாலை 'புஜி' என்ற அந்த மீனுக்கு பொருத்தினார்கள். செயற்கை வாலுடன் நீந்த அதற்குப் பயிற்சியும் அளித்தனர். இப்போது அந்த மீன் நன்றாக நீந்துகிறது. தாவிக்குதித்து மீன் காட்சியகத்துக்கு வருபவர்களுக்கு நல்ல வேடிக்கையும் காட்டுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை பிரான்சிஸ் மதியாபரணம் ஆரோக்கியநாதர்

*(சிசிலியன் கல்வி நிறுவன இயக்குநர்)*

யாழ்ப்பாணம் 32/5 அச்சக வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சி.பி.ம.ஆரோக்கியநாதர் அவர்கள் 19.11.2004 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை பிரான்சிஸ், மரியம்மா மரியாச்சி ஆகியோரின் அன்பு மகனும், மில்றெட் அன்ரோனியா (ஓய்வு பெற்ற ஆசிரியை சென். ஜோண் பொஸ்கோ) வின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருட்சகோதரி சிசிலியா மேரியின் (அ.கா) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சில்வன் சஜீவன் மற்றும் நிகாள் நிறோஜினி (யாழ். பல்கலைக்கழகம்), தீபன் திலீசன் (இமேஜ் ஆட் சென்ரர் உரிமையாளர் - கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜசேகரனின் (நிஷானந்தா நகை மாளிகை) அன்பு மாமனாரும், கனிந்ரனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 22.11.2004 திங்கட்கிழமை 3 மணிக்கு திருப்பலிக்காக புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை.**

(986)

### மரிசலின் அந்தோனி

நெடுந்தீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது வசிப்பவருமான மரிசலின் அந்தோனி என்பவர் 18.11.2004 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மரிசலின் செவிசேனியாவின் அன்பு மகனும், அந்தோனி, இசபெல் ஆகியோரின் மருமகனும், நிக்கிலாப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஆவார். லீலிமேரியின் பாசமிகு தந்தையும், சிங்கராஜர் (மேலதிக அரச அதிபர் - திருகோணமலை) அவர்களின் மாமனாரும், கிருஷாந்தன், அனுஷாந்தன், சலோஜினி, கஜேந்தினி, காலஞ்சென்ற கஜேந்திரன் ஆகியோரின் பேரனுமாவார். செல்வம், ஜீவரட்ணம், யோகரட்ணம், கெரி ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னார் ஆரோக்கியம், புஸ்பம், மரியாம்பிள்ளை, வரப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.112004 நெடுந்தீவு மத்தி சேமக்காலையில் காலை 11.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**அனுஷாந்தன்** *(பேரன்)*

(சி-3383)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நோர்வேயை அகற்றுவது குறித்து அவசரப்பட்டு முடிவெடுக்கமுடியாது

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சியில் அனுசரணையாளராகச் செயற்பட்டுவரும் நோர்வேயை வெளியேற்றவேண்டும் என்ற யோசனையில் அவசரப்பட்டு எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாது என்று அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் விடுத்த விசேட அறிக்கையில் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணையாளர் பங்கு தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் சமர்ப்பித்த பிரேரணை தொடர்பாகவே அவர் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது-

இறைமையுள்ள இரண்டு நாடுகளின் அரசாங்கங்களுக்கிடையில் எதுவித கருத்துவேறுபாடுகள் இருந்தால் இராஜதந்திர முறையில் அணுகப்படவேண்டும்.

சமாதான நடைமுறைகளில் இரு அரசாங்கங்களுக்கிடையிலான கருத்துவேறுபாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்துவைக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சமாதான நடைமுறைகளுக்குக் கொண்டுவருவதில் தமது அரசாங்கத்துக்கு நோர்வே அரசாங்கம் பயனுள்ள பங்கை ஆற்றிவருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உரையாற்றும் போது-

வடக்கு - கிழக்கு பிரச்சினையைப் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்து வைக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது. சகல சமூகத்தவர்களுக்கும் ஏற்றவாறு தீர்வுகாணப்படவேண்டும்.

முன்னைய அரசாங்க காலத்தில் நோர்வே - அனுசரணையாளருக்குப் பதிலாக மத்தியஸ்தராகவே செயற்பட்டது. இதனாலேயே பிரச்சினைகள் தோன்றின என்று குறிப்பிட்டார்.

# புலிகளின் அலுவலகம் மீது அக்கரைப்பற்றில் கிரனேட் வீச்சு!

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் விடுதலைப் புலிகளின் மாவட்ட நிர்வாகத்துறை அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களினால் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களால் வீசப்பட்ட இந்த கிரனேட் அலுவலகக் கட்டடத்தில் விழுந்து வெடித்ததில் கட்டடம் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இராணுவகட்டுப்பாட்டு பகுதியிலும் - அக்கரைப்பற்றின் மையப் பகுதியிலும் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தப் பகுதி 24 மணிநேரமும் விசேட அதிரடிப் படை பொலிஸ் கண்காணிப்பிற்குட்பட்ட பகுதியாகும்.

போராளிகள் தாக்கப்படுவதுடன் அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டு வருவதும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

இதுபற்றி போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கும், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞர்கள்...

யில் மேற்கொள்ளப்பட்ட படுகொலையென்றே நாம் கருதுகின்றோம்.

இந்தக் கொலைச்சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் இராணுவ மினி முகாம்களும், காவலரண்களும் அமைந்துள்ளன. அடிக்கடி இராணுவ வீதி ரோந்துகளும் இடம்பெற்று வருகின்ற சூழ்நிலையில் இந்த வீதியால் பகிரங்கமாக துப்பாக்கிதாரிகளால் எவ்வாறு நடமாட முடியும்.

எனவே, இச் சம்பவமானது ஓர் திட்டமிட்ட கொலையாகும். அத்துடன் இந்தக் கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தீவிர இராணுவக் கண்காணிப்பிலிருந்து எவ்வாறு தப்பிப்போகமுடியும். எனவே இந்தப்பகுதியில் நடந்த இக் கொலைச் சம்பவத்துக்கு படைத்தரப்பே பொறுப்பேற்கவேண்டும்.

அப்பாவிகள் மீதான கொலைச் சம்பவங்கள் இனிமேலும் தொடராமல் நிறுத்தப்படல்வேண்டும். இதற்கு காரணமானவர்களை உடன் கண்டுபிடித்து கைதுசெய்து நீதியின் முன் நிறுத்தவேண்டும்.

இந்தச் சம்பவமானது சமாதானத்தை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் மக்களின் மனங்களை கொதிப்படைய வைத்துள்ளதுடன், மக்களின் எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கியுள்ளது.

சமாதானத் திற்கான சூழலையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது என, மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேடுதலுக்கு...

வீதிகளை தற்காலிகமாக மூடிவிடுமாறும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான படுகொலைகளைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாதெனவும் அதிகூடிய பலத்தைப் பிரயோகித்து கொலைகாரர்களை கைது செய்யவேண்டுமெனவும் பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## இளைஞர் படுகொலையை...

குமான பஸ்சேவைகளை இடைநிறுத்தி எதிர்ப்பினைத் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஹர்த்தாலுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் பூரண ஆதரவு தெரிவித்துள்ளது. அத்துடன், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், வர்த்தக நிலையங்கள், மற்றும் ஏனைய பொது அமைப்புக்கள் அனைத்தையும் இந்தக் ஹர்த்தால் நிகழ்வுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் கோரியுள்ளது.

சமாதானத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் எண்ணத்துடனும் திட்டமிட்ட வகையில் இராணுவமே இந்தப் படுகொலையைச் செய்துள்ளது என்பது கண்கூடு. இவ்வாறான மிலேச்சத்தனமான அப்பாவிப் பொதுமக்கள் மீதான படுகொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான படுகொலைகளை தமிழ்மக்களும், தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதை இராணுவம் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக எவர் மீதும் இந்தக் கொலைக் குற்றத்தை சுமத்த முயலாமல் இத்தகைய செயற்பாடுகளை இராணுவம் செய்வதைக் கைவிட வேண்டும்.

இல்லையேல் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சந்தித்தேயாக வேண் டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயிற்சி முடிந்த பட்டதாரிகளுக்கு பெப்ரவரி முதல் நியமனம்!

(கொழும்பு)

தற்போது பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதாக பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## மிலேச்சத்தனமான...

நேற்று மாலை நடந்த இந்தச் சம்பவத்திற்கு படையினரே முழுப் பொறுப்பேற்கவேண்டும். கிழக்கைப் போலவே தற்போது இங்கும் பதட்ட நிலையை ஏற்படுத்தி மக்களை யுத்தத்திற்கு இட்டுச் செல்லவே படையினர் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழ மக்களால் எழுச்சி கொள்ளப்படவுள்ள தேசியத் தலைவரின் பிறந்தநாள் மற்றும் மாவீரர் நாள் தின நிகழ்வுகளை குழப்புவதற்கு அல்லது அந்த செயற்பாடுகளைப் பொறுக்கமுடியாத நிலையிலேயே படையினர் இந்த செயற்பாட்டை மேற்கொண்டுள்ளனர்.

விளையாட்டு வீரர்கள் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருக்கும்போது சுடப்பட்டு உயிரிழந்தமையென்பது இதுவே முதற்தடவையாகும். அதுவும் தற்போதைய சமாதான காலத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனவே, இந்தச் சம்பவத்தை தமிழீழத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் சார்பாக உயிரிழந்த மற்றும் காயமடைந்த குடும்பத்தினருக்கு தமிழீழ விளையாட்டுத்துறை தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் தொடருமாயின் இளம் சமுதாயத்தைக்கொண்ட விளையாட்டு வீரர்கள் சிங்களப் பேரினவாத அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழுவதை தடுக்கமுடியாததுடன் இந்தச் சம்பவமானது ஒரு இக்கட்டான கட்டத்திற்குத்தான் தமிழ் மக்களையும் விளையாட்டு வீரர்களையும் இட்டுச் செல்லு மெனவும் அவர் தெரிவித்தார்.

## உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்...

சந்தன பிள்ளை தெரேசா என்ற பெண்ணுக்கு ஆயுள் தண்டனை தீர்ப்பளித்துவிட்டு தனது உத்தியோகபூர்வ வாசஸ் தலத்துக்குச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுமாலை 3.45 மணியளவில பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு அருகில் - சரணமாவத்தையிலுள்ள நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்குத் திரும்பிய நீதிபதி, வாகன தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்திய போது, வாகனம் ஒன்றில் வந்த துப்பாக்கிநபர்கள் சரத் அம்பேபிட்டிய மீது தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து துப்பாக்கி நபர்கள் வெள்ளை நிற மெஸ்டா ரகத்தைச் சேர்ந்த 252 - 0882 என்ற வாகனத்தில் தப்பிச் சென்றதாகவும் தெரியவருகிறது.

பிஸ்டலால் சுடப்பட்ட மேல்நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டியவும் அவரது மெய்க் காவலரான பொலிஸ் இன்ஸ்பெக்டர் உபாலியும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதையடுத்து பொலிஸார் நடத்திய திடீர் விசாரணையை அடுத்து- கொலையாளிகள் தப்பிச்சென்ற வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது.

ராஜகிரியவில் உள்ள வாடகைக்கு வாகனங்களை விடும் முகவர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட பிக்கப் வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாத இருவரே இந்தத் தாக்குதலை நடத்தினர்.

மேல்நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டியவை படுகொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் நேற்றுமாலை நாரஹேன் பிட்டிய பொலிஸ் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதென்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் லூகொட தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட இந்த வாகனத்துக்கு அருகில் மற்றொரு வாகனம் எவரும் இல்லாத நிலையில் காணப்பட்டது. இந்த இரு வாகனங்கள் சம்பந்தமாக விசாரணைகள் நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதுடன் நகருக்குள் நுழையும் மற்றும் வெளிச்செல்லும் வாகனங்கள் தடுத்துநிறுத்தப்பட்டு கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

பல சர்ச்சைக்குரிய வழக்குகளில் தீர்ப்புக்களை வழங்கிய சரத் அம்பேபிட்டியவின் கொலைக்கு அவர் நேற்று வழங்கிய ஆயுள் தண்டனைத் தீர்ப்பே காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்தை சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் ஆகியோரும் சென்று பார்வையிட்டனர். கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் சறோஜினி குசலவீரவர்த்தன மரண விசாரணைகளை நடத்தினார். (01)

## விளையாட்டு வீரர்கள்...

சிவப்புநிற 'பஷன்' மோட்டார் சைக்கிளில் ஆலடி வீதியூடாக தப்பிச் சென்றனர்.

இந்த மிலேச்சத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் உதைபந்தாட்டம் ஆடிக்கொண்டிருந்த வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழக வீரர்களான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி யைச் சேர்ந்தவர்களான சதாசிவம் குமரன் (வயது 21), இராசேந்திரம் சுரேஸ்குமார் (வயது 21) ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதேவேளை மைதானத்துக்குச் சற்றுத்தொலைவில் நின்ற பொன்னுத்துரை தெய்வேந்திரம் (வயது 34) என்பவர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பிரேதப் பரிசோதனை மற்றும் நீதிவான் விசாரணைக்காக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து வல்வெட்டித்துறைப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சடலங்கள் வைக்கப்பட்டிருக்கும் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் பொலிஸாரும் படையினரும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள், செய்தியாளர்கள் எவரையும் பொலிஸார் வைத்தியசாலைக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. இன்று காலை மரண விசாரணைகள் இடம்பெறும் எனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற ஊரிக்காடு சிதம்பரக் கல்லூரி மைதானத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் இராணுவ மினி முகாம் ஒன்று உள்ளதுடன், சம்பவ இடத்திலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் மயிலந்தனை இராணுவ முகாமும், 500 மீற்றர் தொலைவில் வல்வெட்டித்துறை சந்தியில் இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் நிலையமும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (14,202)

இணையத் தளத்தில் புலிகளின் குரல்
14 ஆம் ஆண்டு நிறைவில் தமிழீழத் தேசியக் குரலான புலிகளின் குரல்
21.11.2004 முதல் இணையத் தளத்தில் புலிகளின் குரல் WWW.pulikalin kural.com

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ் இனத்தின் வரலாற்றை பிரபாகரன் மாற்றியமைப்பார்!

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன்



(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் நம்பிக்கெட்டதற்கு ஐம்பது வருட வரலாறுண்டு. வலிகாமம் வடக்கில் சிதைக்கப்பட்டுவிட்ட எனது காணியின் எல்லைகளைத் தெரியாது எனது பிள்ளைகள் உள்ளனர். எங்கள் காணியிலிருந்து மாம்பழங்களும், பலாப் பழங்களும் இராணுவத்தால் பறிக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்படுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு தேவையென்றால், தமிழன் வாழவேண்டுமென்றால் அவன் தன்னை ஆளவேண்டும். இதனைப் பிரபாகரன் சாத்தியமாக்குவார். அவரே எம் மண்ணுக்கு வேலி.

பிரபாகரன் என்பது ஒரு மனிதனின் பெயரல்ல. அது ஒரு இனத்தின் பெயர். தமிழினத்தின் வரலாற்றை உலக அரங்கில் அவர் மாற்றியமைப்பார் என்பதில் தமிழினம் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்று, யாழ்.மாவட்டக் கூட்டமைப்பு எம்.பி ஈழவேந்தன் தெரிவித்தார்.

யாழ்.நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபர் திருமதி வ.மேகலிங்கம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அங்கு அவர் கருத்து வெளியிடுகையில் -

இலங்கைத் தீவில் வட - கிழக்கு உட்பட அண்மைக்காலங்களில் 150 தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டு விட்டன. இன்னும் சில தமிழ் பாடசாலைகளில் அதிபரும், ஒரு சில ஆசிரியர்களும் சிங்களவர்களாகவே நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்சி மொழி சிங்களம், பயிற்சி மொழிகளில் தமிழும் ஒன்று என்ற நிலையே இந்தத் துயரத்துக்குக் காரணம். இந்தப் பகுதிகளில் தமிழர்களும் பெயரில் மட்டுமே தமிழைக் கொண்டிருக்கின்றனர். அவர்களிடையே பேச்சு மொழியாக சிங்களமே இருக்கிறது. காலப்போக்கில் இவர்களது எண்ணிக்கை சிங்கள இனத்தினருடனேயே சேர்க்கப்பட்டுப்போகும்.

மொழி என்பது ஒரு இனத்தின் விழி மட்டுமல்ல. ஒரு இனத்தின் உயிரும் அதுவே. மொழி அழியும் போது இனமும் அழிந்துதான் போகும். மொழி நிலைக்க இனம் வாழவேண்டும். இனம் வாழ நிலம் வேண்டும். இன்று எமது இனம் தனது நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

1800 ஆம் ஆண்டுகளில் இந்தத் தீவில் தமிழர்களது நிலப்பரப்பு 10,803 சதுர மைல்களாக இருந்ததை குடித்தொகை மதிப்பீட்டு அறிக்கைகளிலிருந்து அறியமுடிகிறது. இந்த நிலை 1948 ஆம் ஆண் டில் 8,500 சதுர மைல்களாகி, 2003 ஆம் ஆண்டில் வெறும் 6,500 சதுர மைல்களாகக் குறுக்கப்பட்டு விட்டது.


அதாவது 40 வீதமான தமிழ் மண் பறிக்கப்பட்டு விட்டது. போர்க் காலத்தில் எம் மண் பறிபோகாது காப்பற்றப்பட்டது. ஆனால் போரற்ற சமாதான காலத்தில் அது பறிபோய்க் கொண்டிருக்கிறது. இதைத் தடுக்கமுடியாத நிலையில் நாம் இன்று உள்ளோம்.

தமிழ் மக்களின் அரசியலில் இன்று புயல் வீசுகின்றது. அது இன்னும் பல நாட்களுக்கு வீசலாம். ஆயினும் நாம் எமது இளம் சிறார்களது வாழ்வில் இளம் தென்றல் வீசும் நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும். அடுத்த தலைமுறையினர் எம்மோடு இல்லை யென்று கூறுமளவுக்கு அவர்கள் இன்று சீரழிந்து போய்க் கொண்டிருக்கின்றனர்.

மண்ணோடும், மக்களோடும் இணைந்து வாழ்வதே எமக்குரிய சிறப்பாகும். ஆனால் தமிழன் வாழ ஒரு நாடு இல்லாததால், உலகம் முழுவதும் பரவி சீரழிந்து போகும் நிலைக்கு எமது தமிழினம் இன்று தாழ்ந்துவிட்டது. தமிழன் சூழ்நிலைக் கைதியாக வாழப் பழகிக் கொண்டுவிட்டான்.

எங்கே செல்வம் அதிகமாக உள்ளதோ அங்கு செந்தமிழ் வளர்க்கப்படுகிறது. எங்கே செல்வம் உயர்வாக உள்ளதோ அங்கே செந்தமிழ் மறக்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (31)





கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் நடந்தேறிய கலாசார விழா நிகழ்வின்போது - பிரதேச செயலகக் கொடியை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஏற்றிவைப்பதையும், இரண்டாம் நாள் நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். (13)

## ஒருங்கிணைப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் பி.ப 2.00 மணிக்கு அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.செயலகம் அழைப்பு விடுத்துள்ளது. (29)

# விபரங்களை அனுப்புமாறு அதிபர்களிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகள் அடுத்த வருட, வருடாந்த அமுலாக்கல் திட்டத்தின் கீழ் - பின்வரும் விபரங்களை இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கோட்டக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

வகுப்பறைக் கட்டடம் அமைத்தல், கட்டடத் திருத்தவேலை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டடம், நீர் விநியோகம், மாணவர் மலசல கூடம், ஆசிரியர் மலசல கூடம், க.பொ.த சாதாரண தரம், உயர் தரம் விஞ்ஞான ஆய்வுகூடம், செயற்பாட்டறை, ஒன்று கூடல் மண்டபம், மனையியல் கூடம், அதிபர் விடுதி, ஆசிரியர் விடுதி, அழகியல் கூடம், நூலகக் கட்டடம், கணினிக் கட்டடம், மாணவர் விடுதி, நிர்வாகக் கட்டடம், தற்காலிகக் கட்டடத் திருத்தம், தளபாடத் திருத்தம் போன்ற விபரங்கள் கோரப்பட்டுள்ளன. (101)

# லயன்ஸ்-சர்வதேச நிதியம் இணைந்து நுளம்பு வலைகள் விநியோகம்

லயன்ஸ் கழகம் - மாவட்டம் 306 காசநோய், மலேரியா, எயிட்ஸ் ஆகியவற்றுக்கெதிரான சர்வதேச நிதியத்துடன் இணைந்து நுளம்பு வலைகளை விநியோகித்து வருகிறது.

நிரந்தரமான மருந்து பூசப்பட்ட இந்த நுளம்பு வலைகள் ஏற்கனவே வடமராட்சி கிழக்கில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 6 ஆயிரம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி வாழ் மக்களுக்கு இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகம், ஆனைக்கோட்டையிலுள்ள வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு மையம், என்பவற்றுக்கு இரண்டு தையல் இயந்திரங்களை இலவசமாக வழங்கியுள்ளது.

இதன்மூலம் நுளம்பு வலைகள் தைக்கப்பட்டு குறைந்த விலையில் வழங்கப்படுவதாக லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்தனர். (101)

# ஆசிரியர்களின் இடமாற்றத்தால் கல்வி நிலை பாதிக்கும் அபாயம்!

## பெற்றோர்கள் கவலை தெரிவிப்பு

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தமிழ், சமயம் கற்பித்த ஆசிரியர்களை வருட முடிவுக்குள் இடம் மாற்றியதையிட்டு பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

தரம் 9 வரையுள்ள சுமார் 300 மாணவர்கள் வரை கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் சித்திரம், சங்கீதம் தமிழ் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியரின்றி மாணவர்கள் தமது கல்வியை மிகுந்த சிரமத்தின் மத்தியில் கற்கின்றனர். வருட முடிவுக்குள் பதில் ஆசிரியர் நியமிக்கப்படாது இடமாற்றம் பெற்றுச் சென்றதனால், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பெரிதும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பிள்ளைகள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் கட்டடங்கள் பல இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்தும் உள்ளன.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் மாணவர்கள் ஏனைய பாடசாலைகளை நாடிச் செல்லாது, இந்தப் பாடசாலையை நம்பிக் கல்வி பயிலும் போது ஆசிரியர் இடமாற்றம் பற்றி கல்வி சார் உத்தியோகத்தர்களும் பாராமுகமாக இருப்பதால் பெற்றோர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட ஏற்பாடு செய்து வருகின்றனர். (101)

# சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

கடந்த கால யுத்த நடவடிக்கை காரணமாக சேதமடைந்த சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தை புனரமைக்க வேண்டுமென சாவகச்சேரி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி மைதானத்தில் அமைந்துள்ள இந்த நீதிமன்றக் கட்டடம் சிதைவுண்டு காட்சியளிப்பது நகரத்தின் அழகை கெடுப்பதாகவும், ஆகவே இந்தக் கட்டடத்தைப் புனரமைப்பபுச் செய்து தரும்படி இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த நீதிமன்றக் கட்டடத்தை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டுள்ளது

நாகேஸ்வரம், அளவெட்டி, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்துக்கு பல லட்ச ரூபா செலவில் புதிய சித்திரத் தேர் ஒன்றும், தேர் முட்டியும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. பக்தர் ஒருவரால் ஆலயத்துக்கு மேலும் 10 பரப்புக் காணி வாங்கி, அன்பளிப்பாக வழங்கப்பட்டதைத் தொடர்ந்து புனரமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.(206)

## சிற்றூர்தி சங்கத்தின் ஏற்பாட்டில் தலைவரின் பிறந்தநாள

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட தனியார் போக்குவரத்து சேவை சங்கங்களின் ஒன்றியம் தேசியத் தலைவருக்கான பரிசு ஒன்றை வழங்கவுள்ளது.

இதேவேளை தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை சித்தரிக்கும் வகையில் அன்றைய தினம் சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து சேவை சங்கங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் தேசியத் தலைவரின் படங்களை வைத்து பிறந்த தினத்தை கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற நிதியிலிருந்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் அதிபர் மூலம் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கே இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (14)

## பொதுக் கூட்டம்

வடமராட்சி - கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் இன்று மாலை 5 மணியளவில் கற்கோவளம் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது. (20)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : வ.வனோஜ்
முகவரி : நவிண்டில்

ஏழாவது அகவையில்



பெயர் : என்.நிலோஜன்
முகவரி : கந்தரோடை வீதி சுன்னாகம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------------
முகவரி :----------------
பிறந்த ஆண்டு:----------------



கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்

# விடுதலைப் போராட்டம் சர்வதேச மயமானதற்கு புலம்பெயர்ந்த மக்களின் பங்கு மிகப்பெரியது!

## தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

எமது விடுதலைப் போராட்டம் எவ்வாறு சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று பார்த்தால், அதில் புலம் பெயர்ந்த மக்களின் பங்கு மிகப்பெரியது என, தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை, பல இடப்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. அந்த இடப்பெயர்வுகளை எமக்கு சாதகமாக எவ்வாறு ஆக்கிக் கொண்டோம், அல்லது ஆக்கிக் கொள்ளவேண்டும் என்பதை நாம் இந்தக் கட்டத்தில் பார்க்க வேண்டும்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் புலப்பெயர்வுகள் வருவது வழமை. சில இடங்களில் சில தவிர்க்க முடியாத புலப்பெயர்வுகள் வருவது வழமையே.

இவ்வாறான பாதகமான ஒரு சூழலை, நாம் எமது விடுதலைப் போராட்டத்துக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம் என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

அந்த வகையிலே புலம்பெயர்ந்து உலக நாடுகளில் வாழ்கின்ற எமது உறவுகள் எமது விடுதலைப் போராடடத்துக்கு அன்றும், இன்றும் பக்க பலமாக இருக்கிறார்கள்.

எமது தேசியத்தை சிதைப்பதற்கும், விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்குமாக, எமக்கு எதிரானவர்கள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள், அவை எவ்வாறு முறியடிக்கப்பட்டு, இன்று தழிழீழத் தேசியம் எவ்வாறு சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால்- அதில் புலம் பெயர்ந்து இருக்கின்ற எமது மக்களின் பங்கு மிகப் பெரியது.

எமக்கு எதிராக தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை, எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக சிங்கள அரசு மட்டுமன்றி, சிங்கள அரசுக்குத் துணை நிற்கின்ற, எமது விடுதலை போராட்டத்துக்கு எதிராகச் செயற்படுகின்ற சக்திகள் சர்வதேச ரீதியாக எமக்கெதிரான கருத்துக்களை விதைத்திருக்கின்றார்கள் என்பதை நீங்கள் அங்கு சென்று பார்த்தால்தான் தெரியும்.

அவ்வாறான கருத்துக்களுக்கு சரியான பதிலடிகளை அவ்வப்போது கொடுத்தும், எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்துகின்ற ஒரு அரசியல் வெற்றியை, அரசியல் சவால்களை எதிர்கொள்கின்ற பாரிய பணிகளைப் புலம் பெயர்ந்த மக்கள் மிகவும் தீவிரமாக, அர்ப்பணிப்போடு செயற்படுத்தி வருகின்றனர் என்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அண்மைக்காலமாக நாம் யதார்த்தமாக சிந்தித்துப் பார்த்தால், ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் கூட்டத்துக்குச் சென்று திரும்பியபோது இங்கு கூறிய முதல் வார்த்தை - உலகெல்லாம் இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களுடைய செயற்பாடுகளை அந்த நாட்டு அரசு உடனடியாக முடக்கவேண்டும் என நினைத்தார்.

ஏனெனில் தமிழீழத் தேசியத்தின் எழுச்சியை ஒடுக்குவதற்காக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் சிங்கள பேரினவாதத்தை பிரதிபலிக்கின்ற ஜனாதிபதி, அவர் சென்ற இடங்களில் வாழ்கின்ற எமது உறவுகளின் செயற்பாடுகள் அவருக்குப் பெரிய அடியாக இருந்தது.

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும், எமது விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராக எவ்வாறான செயற்பாட்டையும் அவர்கள் அங்கு முன்னெடுத்தாலும், அவற்றை முறியடித்து எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்சென்று, சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கான சகல ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலும் எமது மக்கள் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

அந்த வகையிலே கவிதை வடிவிலான இவ்வாறான நூல்கள் தமிழ்த் தேசியத்துக்குப் புத்துணர்ச்சியை ஊட்டுகின்ற, தமிழ்த் தேசியத்தின் ஓர் இணைப்புப் பாலமாக, தேசிய உணர்வை வளர்த்தெடுப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடாகத்தான் நாம் இந்தப் புத்தகத்தை பார்க்கிறோம் எனவும் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் மேலும் தெரிவித்தார்.




### மன்னார் மாவட்டத்துக்கென 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(மன்னார்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திடத்தின் கீழ், மன்னார் மாவட்ட அபிவிருத்தித் திட்டத்திக்கென 80 லட்சம் ரூபா - வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் 98 அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (203)

### அடிப்படை வசதியின்றி பெரியமடு கிராமம்

(மன்னார்)

மன்னார் - பெரியமடு கிராமத்தில் மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் மக்கள் மருததுவம் மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். இந்தக் கிராமத்தில் 15 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பள்ளமடு மருத்துவமனைக்கு மக்கள் சிகிச்சை பெறச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# வாகனத்தை செலுத்துபவர்கள் சிந்தனை சிதறாமல் இருக்கவேண்டும்!

## மோட்டார் வாகன பரிசோதகர் ஆர்.ஏ.ரி.குலாஸ்

(கிளிநொச்சி)

பாடசாலைகளில் அதிபரும் ஆசிரியர்களும் - மாணவர்களுக்கு வீதி நடைமுறைகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கி, மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் ஆர்.ஏ.ரி. குலாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து உதவி ஆணையாளர் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கலுக்கான எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் தெரிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் சாரதி ஒருவர் வாகனத்தைச் செலுத்திச் செல்லும் ஒவ்வொரு விநாடியும் அவர் ஏதாவது ஒரு ஆபத்தான விளைவை எதிர்கொள்ளவுள்ளார் என்பதை உணர்ந்து கொள்வதுடன், வீதியில் பயணிப்போர் உட்பட பயணிக்கும் வாகன்ங்களுக்கு உயிராபத்தையோ அல்லது சேதத்தையோ உண்டுபண்ணவுள்ளார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வாகன ஓட்டுநர்கள் வாகனத்தைச் செலுத்திச் செல்கையில், ஓட்டுனர்களின் சிந்தனைகள் பல்வேறு நிலைகளில் செல்லாது - ஒரு நிலைப்படுத்தி வாகனத்தைச் செலுத்துவதிலேயே தனது கவனத்தை முற்றுமுழுதாகச் செலுத்துதல் அவசியமானது.

அப்படிச் செயற்படும் பட்சத்திலேயே தனது சாரதீயத்தினை காப்பாற்றிக் கொள்வதுடன், விபத்துக்கள் ஏற்படுவதையும் தவிர்த்துக் கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(122)

# மாவீரர் நாள் ஏற்பாடு தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல்!

(கிளிநொச்சி)

மாவீரர் நாள் ஏற்பாடுகள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று, நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு கிளிநொச்சி அரசியற்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கட்டளைத் தளபதி கேணல் தீபன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

மாவீரர் நாள் ஏற்பாடுகள், மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாகக் கிளிநொச்சி அரசியற்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் வலுவூட்டாளர்களுக்கான சான்றிதழ் வழங்கல்

(கிளிநொச்சி)

நியாப் செயற்திட்டத்தின் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேவையாற்றிய சமூக வலுவூட்டாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் நிர்வாக அலுவலர் மா.ஜெறாட் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட நியாப் பிரதித் திட்டப்பணிப்பாளர் சிவகுமார், கிளிநொச்சி மாவட்ட நியாப் திட்டப் பணிப்பாளர் வினோதராஜா, தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டக் கண்காணிப்புப் பிரிவுப் பணிப்பாளர் ஜகாஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரை, தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புரைகளை வினோதராஜா, ஜெகாஸ், தவமோகன், சிவபாலன், ராஜன், சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக வலுவூட்டல் வேலைத் திட்டங்களில் - நியாப் செயற்திட்டத்தில் 2003 ஆம் ஆண்டில் பங்கேற்றுச் செயற்பட்ட 60 சமூக வலுவூட்டாளர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட நியாப் பிரதி திட்டப் பணிப்பாளர் சிவகுமார், கிளிநொச்சி மாவட்ட பிரதி திட்டப்பணிப்பாளர் ஏ.சி.வினோதராஜா, திட்ட உதவியாளர் விஜயகிருஸ்ணன், சேவாலங்கா பிரதிநிதி தவமோகன், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பணிப்பாளர் வின்சன் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியக பிரிவுசார் பணியாளர்களும், மாவட்டச் செயலக அதிகாரிகளும், சமூக வலுவூட்டல் இணைப்பாளர்கள், சமூக வலுவூட்டல் பணியாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டி நடத்த ஏற்பாடு

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களம் திறந்த கட்டுரைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இந்தத் திறந்த போட்டியில் 'எயிட்ஸ் நோயிலிருந்து எம்மையும் எமது பிரதேசத்தையும் பாதுகாப்போம்' என்னும் தலைப்பில் 300 சொற்களுக்கு மேற்படாமல் இந்தக் கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சுகாதாரத் திணைக்கள பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனவும், கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ந.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

கட்டுரையாளரின் பெயர், முகவரி என்பன தனியான தாளில் எழுதி இணைக்கப்படவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றிபெறுவோருக்கு முதல் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 3 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(கிளிநொச்சி)

மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி, இன்று காலை 8.00 மணிக்கு கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பதிவு செய்த கழகங்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், சுற்றுநிருபம் கிடைக்காதவர்கள் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# 3 பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள 3 பாடசாலைகள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை, கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இந்த மூன்று பாடசாலைகளுமே மூடப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணிச் சந்தியிலிருந்து கட்டைக்காடு வரை வெள்ளம் தேங்கி நிற்பதால், போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாடசாலைகளை நடத்தமுடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)



**கேவிலிலிருந்து புளியங்குளத்திற்கான பயணிகள் பஸ் சேவையை வடமராட்சி கிழக்கு சிற்றூர்திகள் சேவைச்சங்கத் தலைவர் மு.தங்கவேலு கட்டைக்காடு சந்தியிலிருந்து ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.** (21)